REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

# தினகரன்
THINAKARAN
2024 ஜனவரி 15 திங்கட்கிழமை

வரு. 92 இல. 13 | Monday 15, January, 2024 | 12 பக்கங்கள் | 50/-

## சுபீட்சமும், மகிழ்ச்சியும் நிறைந்த நம்பிக்கையை ஏற்படுத்தட்டும்



### தைத்திருநாள் வாழ்த்தில் ஜனாதிபதி

உழவர் திருநாளான தைத் திருநாள், மகிழ்ச்சியையும் நன்றியையும் வெளிப்படுத்தும் வகையில், உலகெங்கிலும் உள்ள தமிழர்கள் கொண்டாடும் செழிப்பான அறுவடைத் திருவிழாவே தைப்பொங்கலென, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

தைத்திருநாள் வாழ்த்துச் செய்தியில் ஜனாதிபதி தெரிவித்துள்ளதாவது: வளமான அறுவடையையும், புதிய ஆரம்பத்துக்கான

06

## எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வளமான புத்தாண்டின் விடியல்

### தைப்பொங்கல் வாழ்த்தில் பிரதமர் தினேஷ்



இந்து கலாசாரத்தின் மேன்மையை வெளிப்படுத்தும் தேசிய பண்டிகையான 'தைப்பொங்கல்', விவசாய பாரம்பரியத்தின் அடிப்படையில் அமைதி, ஒற்றுமை மற்றும் அன்பு ஆகிய அடிப்படைப் பெறுமானங்களை உள்ளடக்கியுள்ளது.

இயற்கையோடு இயைந்த பாரம்பரிய வாழ்வொழுங்கின் மீது நம்பிக்கை கொண்ட தமிழ் விவசாயிகள், சிறந்த விளைச்சலை

06

## மனிதன், இயற்கைக்கிடையிலான பிணைப்புக்கு நன்றி தெரிவிக்கும் நாள்

### ஆன்மீக உறுதியில் நாட்டை முன்னேற்றுவோம்



இயற்கைக்கு நன்றி செலுத்தும் முகமாக இந்துக்கள் பக்தியுடனும் மரியாதையுடனும் கொண்டாடும் தைப்பொங்கல் திருநாள் தொடர்பில் வாழ்த்துத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித்பிரேமதாசா தெரவித்துள்ளார்.

மானுட வளர்ச்சியின் தொடக்கத்திலிருந்து இயற்கையுடன் இணைந்த வாழ்க்கையையே நாம், கடைப்பிடிக்கிறோம். உலகுக்கு உயிர் கொடுக்கும் சூரிய பகவானை வழிபடுவது பண்டைய காலத்திலிருந்தே நடந்து வருகிறது. தைப்பொங்கல் பண்டிகை இந்த

06

## காரைநகரில் இன்று தேசிய நல்லிணக்க பொங்கல்

யாழ்ப்பாணம், காரைநகர் வியாவில் ஐயனார் ஆலயத்தில் நடைபெறவுள்ள தேசிய நல்லிணக்க தைப்பொங்கல் விழாவில் நீதி அமைச்சர் விஜேயதாஸ ராஜபக்ஷ பங்கேற்கவுள்ளார்.

தேசிய ஒருமைப்பாட்டு நல்லிணக்க அலுவலக இணைப்பாளர் கந்தசாமி கருணாகரனின் ஒருங்கிணைப்பில், நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ஷவின் பங்குபெற்றுதலுடன் இன்று காலை 10 மணிக்கு இந்த பொங்கல் விழா நடைபெறவுள்ளது. இந்நிகழ்வு, வியாவில் வாழ் மக்கள் வெளிநாட்டு வாழ் உறவுகளுடன் இணைந்து சிறப்பாக நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

## தேடப்படும் 42,248 சந்தேக நபர்களை கைதுசெய்ய பொலிஸ் மாஅதிபர் பணிப்பு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாடளாவிய ரீதியில் பல்வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டுள்ள சந்தேக நபர்கள் 42,248 பேரின் பெயர்ப் பட்டியல்கள், சகல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் மற்றும் குற்றத்தடுப்பு விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரிக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

யுக்திய நடவடிக்கையின் கீழ், மேற்படி சந்தேக நபர்களை கைது செய்யுமாறு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாகவும் பதில் பொலிஸ்

06

## ஜனாதிபதித் தேர்தலில் எவராலும் ரணிலுக்கு ஈடு கொடுக்க முடியாது

### சர்வதேசத்தை வெற்றிகொள்ளும் ஆளுமையும் அவரிடமுள்ளது



**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக தெரிவிக்கப்படும் பெயர்களில் ஜனாதிபதி ரணிலுடன் ஈடு கொடுக்க எவராலும் முடியாதென, ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன எம்பி தெரிவித்துள்ளார். சர்வதேசத்தை வெற்றி கொண்டு இலங்கையைக் கட்டியெழுப்பக் கூடிய ஒரே தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

06




### வரலாற்றில் முதல் முறையாக

# ரூ. 1,600 கோடி பெறுமதியான இருபது ரயில் எஞ்ஜின்கள்; இந்தியா அன்பளிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



வரலாற்றில் முதற்தடவையாக 1,600 கோடி ரூபா பெறுமதியான இருபது ரயில் எஞ்ஜின்களை, இந்தியா அன்பளிப்புச் செய்துள்ளதாக, போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார். ஒரு ரயில் எஞ்ஜின் பெறுமதி 800 மில்லியன் ரூபாவென தெரிவித்த அமைச்சர், சுதந்திரத்தின் பின்னர் இந்தியாவிலிருந்தோ அல்லது வேறு நாடுகளிலிருந்தோ இவ்வாறான பாரிய அன்பளிப்பு வரலாற்றில் முதல் தடவையாக கிடைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

20 ரயில் எஞ்ஜின்களைப் பெற்றுக்கொள்வதற்காக இந்திய அரசாங்கம் மற்றும் இலங்கையிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகருடன் பேச்சுவார்த்தை நடத்தி , எழுத்து மூலம் வேண்டுகோள் விடுத்ததாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். அந்தவகையில், தமது வேண்டுகோளுக்கு கவனம் செலுத்தியமை தொடர்பில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி மற்றும் இலங்கையிலிருந்த முன்னாள் இந்திய உயர்ஸ்தானிகர் ஆகியோருக்கும், தாம் நன்றி தெரிவிப்பதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இலவசமாக வழங்கும் இரண்டு எஞ்ஜின்களை பார்வையிடுவதற்காக இலங்கையிலிருந்து 65 பேர் இந்தியாவுக்குச் சென்றதாக பொய்யான செய்திகள் பத்திரிகைகளில் வெளிவந்தன. ஐந்து பேர் கொண்ட குழுவே இந்தியா சென்றதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

06

**இரண்டு எஞ்ஜின்களை பார்வையிட 65 பேர் இந்தியா சென்றதாக சில ஊடகங்களில் வெளியான செய்தி கவலையளிப்பதாக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவிப்பு**

## சுபீட்சமாக வாழும் பொற்காலத்தை சகலரும் இணைந்து வென்றெடுப்போம்

### அறம் வெல்வதுபோல எமக்கும் வெற்றி கிட்டும்



புது வாழ்வு பொங்கும் என்ற நம்பிக்கையுடன் தைத்திருநாளை வரவேற்பதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். தைப்பொங்கல் வாழ்த்தில் அமைச்சர் தெரிவித்துள்ளதாவது:

தைப்பொங்கல் திருநாள் எமது மக்களின் பண்பாட்டு பெருநாள், உழவர் திருநாள் என்றும், தமிழர் பெருநாள் என்றும் எமது

06

## 'பொருளாதார நெருக்கடி' எனும் இருள் அகன்று வழி பிறக்கட்டும்



நாட்டை சூழ்ந்துள்ள 'பொருளாதார நெருக்கடி' எனும் இருள் அகன்று, இலங்கை தேசம் முன்னேற்றம் அடையவும், மக்கள் வாழ்வு மேம்படவும் வழி பிறக்குமென அமைச்சர் ஜீவன் தொண்டமான் தனது பொங்கல் வாழ்த்து செய்தியில் தெரிவித்துள்ளார்.

"தைப்பிறந்தால் வழிபிறக்கும் என்பது இந்து மக்களின்

06



## 03 'அனைவருக்கும் வீடு' திட்டத்தில் 15,000 பேருக்கு கடன் வசதிகள்

## கந்தக்காடு புனர்வாழ்வு நிலைய நிர்வாகத்தில் மாற்றம் செய்யப்படும்

### இரு தினங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்க நீதியமைச்சர் பணிப்புரை



**லோரன்ஸ் செல்வநாயகம்**

கந்தக்காடு புனர்வாழ்வு மத்திய நிலையத்தின் நிர்வாகத்தில் மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு தீர்மானித்துள்ளதாக நீதி, அரசியலமைப்பு மறுசீரமைப்பு மற்றும் சிறைச்சாலைகள் விவகாரங்கள் அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் மற்றும் வேறு குற்றச் செயல்களில் ஈடுபட்டவர்களுக்கு புனர் வாழ்வளிப்பதற்காக அவர்கள் தங்க வைக்கப்படும் வெலிக்கந்தை, கந்தக்காடு புனர்வாழ்வு மத்திய நிலையத்தில் இரண்டு கைதிகள் குழுவினருக்கிடையில் ஏற்பட்ட கைகலப்பு மற்றும் குழப்ப நிலை தொடர்பில், உடனடியாக தமக்கு

06

## கலால் வரி கட்டணம்: ஜனாதிபதி நாடு திரும்பியதும் இறுதி முடிவு



**லோரன்ஸ் செல்வநாயகம்**

கலால் வரி அனுமதிப்பத்திர கட்டணத் திருத்தம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடு திரும்பியதும் இறுதித் தீர்மானம் மேற்கொள்ளப்படும் என, நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

புதிய கலால் வரி அனுமதிப்பத்திர கட்டணத் திருத்தத்தை மேற்கொள்வதற்கு

06

## ரூபா 03 கோடி ஐஸுடன் வத்தளை நபர் திடீர் கைது

### இராணுவப் புலனாய்வினர் அதிரடி



சுமார் 03 கோடி ரூபா பெறுமதியான ஐஸ் போதைப் பொருளுடன் வத்தளைப் பகுதியைச் சேர்ந்த ஒருவர், இராணுவப் புலனாய்வு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார். கைது செய்யப்பட்ட

06

## பால்மா விலைகளில் அடுத்த வாரம் மாற்றம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பல்மாவின் விலைகளை அதிகரிப்பதற்கு தீர்மானித்துள்ளதாக, பால்மா இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது. அந்த வகையில், அடுத்த வாரம் முதல் இந்த விலை அதிகரிப்பை மேற்கொள்ளவுள்ளதாக

06



# நகர்வலம்



## இரத்துச் செய்யப்பட்டிருந்த விவசாய விஞ்ஞான பாடப் பரீட்சை; பெப்ரவரி முதலாம் திகதி

### பரீட்சைகள் திணைக்களம் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**




இம்முறை கல்வி பொது தராதர உயர்தரப் பரீட்சையில் விவசாய விஞ்ஞான பாடப் பரீட்சையை மீள நடத்துவதற்கு பரீட்சைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

அதற்கிணங்க அந்த பரீட்சையை எதிர்வரும் பெப்ரவரி முதலாம் திகதி நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அன்றைய தினம் காலை 8:30 மணி முதல் முற்பகல் 11.00 மணி வரை அந்த பரீட்சையை நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

அந்த வகையில் பரீட்சைகள் திணைக்களத்தினால் இரத்துச் செய்யப்பட்ட கடந்த 10ம் திகதி நடத்தப்பட்ட விவசாய விஞ்ஞான பாடத்தின் இரண்டாம் கேள்விப் பத்திரத்திற்கான புதிய கேள்விப் பத்திரத்தை உள்ளடக்கியதாகவே இந்த விசேட பரீட்சை நடத்தப்படவுள்ளதாகவும் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அந்த வகையில் இம்மாதம் 31 ஆம் திகதி நிறைவு பெறவிருந்த கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை பெப்ரவரி முதலாம் திகதியிலும் நடைபெறும் என்றும் அனைத்துப் பரீட்சை நிலையங்களும் அன்றைய தினத்திலும் வழமை போன்று நடைமுறையிலிருக்கும் என்றும் அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

## பெந்தோட்டை இரத்தினக்கல் கண்காட்சி சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்துள்ளது

### தன்ஸானியா தொழிலதிபர் ஸலீம் அல்மாஸ் புகழாரம்



இலங்கையின் உல்லாசபுரியான பெந்தோட்டை பீச் ஹோட்டலில், சீனன்கோட்டை இரத்தினக்கல் ஆபரண வர்த்தக சங்கத்தின் (CGJTA) ஏற்பாட்டில் நடைபெற்ற சர்வதேச இரத்தினக்கல் கண்காட்சி இலங்கை மீதான உலகின் கவனத்தையும் நம்பிக்கையையும் ஈர்த்துள்ளதென தன்ஸானியா நாட்டின் தொழிலதிபர் ஸலீம் அல்மாஸ் தெரிவித்துள்ளார்.

மூன்று தினங்களாக நடைபெற்ற மேற்படி கண்காட்சி தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில், முதல்நாள் அங்குரார்ப்பண நிகழ்வை ஜனாதிபதி ஆரம்பித்து வைத்தார். இலங்கை ஒரு சிறந்த பாதுகாப்பானதொரு நாடு. இந் நாட்டில் பல வளங்கள் செறிந்து காணப்படுகின்றன. அதிலும் விசேடமாக இலங்கையில் கிடைக்கின்ற இரத்தினக்கற்கள் மிகவும் பெறுமதியும் அதிசிறப்புமிக்கதாகும். நானும் பல நாடுகளுக்கு சென்றிருக்கின்றேன். இருப்பினும் இலங்கையில் கிடைக்கின்ற மாணிக்கக்கற்களுக்கு உலகச்சந்தையில் பெறுமதி அதிகம். அதேபோல் நடைபெற்ற இக்கண்காட்சியில் ஐரோப்பா, ஆசியா, ஆபிரிக்கா நாடுகளைச்சேர்ந்த தொழிலதிபர்களும் கலந்துகொண்டமை இந்நாட்டுக்கு கிடைத்த பெருவெற்றியாகும். அதேபோல் இதனை ஏற்பாடு செய்த சீனன்கோட்டை (CGJTA) சங்கத்திற்கு எனது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன் என்றும் அல்மாஸ் தெரிவித்தார்.




# பொங்கல் வாழ்த்துகள்

## மலையக வாழ் மக்கள் வாழ்விலும் புதுப் பொலிவுடன் வழி பிறக்கட்டும்

### வடிவேல் சுரேஷ் வாழ்த்து செய்தி



உலகத்தில் மனித குலத்தின் பசி போக்கிடும் உணவு தானியங்களை உற்பத்தி செய்யும் விவசாயிகள், இயற்கையின் அருட்கொடையான நிலத்துக்கும் பயிர் செழிக்கப் பயன்படும் உழவு மாடுகளுக்கும் நன்றி தெரிவிக்கின்ற விழாவே தைப்பொங்கல் திருநாள்.

பண்டைக்காலம் முதல் தமிழர்கள் கொண்டாடும் தேசியத் திருவிழாவாகுமென பாராளுமன்ற உறுப்பினரும் இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச்செயலாளரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசருமான வடிவேல் சுரேஷ் விடுத்துள்ள பொங்கல் வாழ்த்து செய்தியில் தெரிவித்துள்ளார்.

தை பிறந்தால் வழி பிறக்கும்' என்பது ஆன்றோர் வாக்கு. அந்த வகையில் என் தொப்புள் கொடி உறவுகளான மலையக மக்கள் வாழ்விலும் புதுப் பொலிவுடன் வழி பிறக்கட்டும் என்ற பிரார்த்தனையோடு தைத்திங்கள் முதல்நாள் தன்னி கரற்ற பண்பாட்டுத் திருநாளாம் பொங்கல் நன்னாளுடன் தமிழ்ப் புத்தாண்டுத் திருநாளையும் இணைத்துக் கொண்டாடி மகிழும் தமிழ் உறவுகளுக்கு நல்லிணக்கம் நிமிர்ந்திட எல்லா வளங்களும் பெருகிட என் இதயம் கனிந்த பொங்கல் நல்வாழ்த்துக்கள்

## புரிந்துணர்வு, விட்டுக்கொடுப்பு, நல் எண்ணங்கள் உருவாகட்டும்

### மருதபாண்டி ரமேஸ்வரன்



தைத் திருநாளாம் தைப் பொங்கலை கோலாகலமாக கொண்டாடும் அனைத்து இந்துப் பெரு மக்களுக்கும் உளம் நிறைந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதில் நான் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ரமேஸ்வரன் விடுத்துள்ள தைத் திருநாள் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

தமிழர்களின் தைப்பொங்கல் திருநாளை முன்னிட்டு அவர் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது

உழவர்களின் அறுவடைத் திருநாளாம் தைத்திருநாள் அன்று மகர சங்கராத்தியம் கொண்டாடப்படுகின்றது. சூரியனுடைய வடக்கிலிருந்து தெற்கு நோக்கிய பயணம்தான் மகர சங்கராத்தியம் என்று சொல்லுகின்றார்கள். எமக்கு மழையையும் வெயிலையும் கொடுத்து உதவுகின்ற சூரியனுக்கு சூரியப் பொங்கல் வைத்து நன்றி செலுத்துகின்ற ஒரு திருநாளாக இத்தைப் பொங்கல் அமைகின்றது. பொங்கல் பொங்கி வருகின்றபோது நாம் அனைவரும் சௌபாக்கியமாக வாழ்வதாக ஐதீகம் சொல்கின்றது. பொங்கல் பலவிதமானது. கோலிப் பண்டிகை, தைப் பொங்கல், மாட்டுப்பொங்கல், காணும் பொங்கல் என பல விதமான பொங்கல்களைக் கொண்டாடுகின்றோம்.

எனவே, தொழிலாளர்களின் வாழ்க்கையில் தீமைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து ஒவ்வொருவரதும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளையும் அழுத்தங்களையும் வெற்றிபெறச் செய்து எம்மில் பல நல்ல வகையான மாற்றங்களை ஏற்படுத்திக் கொடுக்கவும் மேலும் மக்களிடையே புரிந்துணர்வு, விட்டுக்கொடுப்பு போன்ற எண்ணங்கள் உருவாகி எமது மக்கள் சிறப்பாக வாழ்வதற்கு எல்லா வல்ல இறைவனை பிரார்த்திப்போம் எனத் தெரிவித்துள்ளார்.

## இந்து மக்கள் அனைவருக்கும் இனிய தைப்பொங்கல் வாழ்த்துகள்

### ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில்



தைத்திருநாள் உலகெங்கிலும் வாழ்கின்ற தமிழ் மக்கள் அனைவருக்கும் மத, கலாச்சார மற்றும் சமூக ரீதியாக மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நாளாகும். இந்நந்நாளில் அனைத்து இந்து மக்களுக்கும் தைப் பொங்கல் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்வதாக ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் தெரிவித்துள்ளார். தமிழர்கள் தம் வாழ்வில் கொண்டாடி மகிழ்கின்ற பண்டிகைகளில் உன்னதமானதோர் நிகழ்வு இந்த தைத்திருநாளாகும் என்றும் தெரிவித்துள்ளார்.

பண்டைய காலந்தொட்டு உலக சமுதாயம் பலவற்றாலும் கொண்டாடப்பட்ட ஒரு விழா அறுவடை விழா. இதுவே உலகத் தமிழ் மக்கள் அனைவரும் கொண்டாடி மகிழ்கின்ற தைப்பொங்கல் விழாவுக்கான அடிப்படையாகும். இந்த உழவர் திருநாளான தைப் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு வாழ்த்து தெரிவிப்பதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

விவசாயத்துடன் தொடர்புடைய தைப்பொங்கல் பண்டிகையின் போது, அதிக விளைச்சலைப் பெறுவதற்கு ஆசிர்வாதம் வேண்டி சூரிய பகவானுக்கு வழிபாடு செய்கின்றோம்.

நம் நாட்டில் உணவுப் பாதுகாப்பையும், போஷாக்கையும் உறுதிசெய்து தன்னிறைவு பெற்ற நாட்டைக் கட்டியெழுப்பும் அரசாங்கத்தின் முயற்சிகளுக்கான அர்த்தமுள்ள சந்தர்ப்பமாக இவ்வருடத் தைப்பொங்கல் பண்டிகையை நாம் கருதுவோம். வறுமை நீங்கி, செழிப்பான நாட்டை உருவாக்கும் பயணத்திற்கு இத்தைப்பொங்கல் பண்டிகை ஆசிர்வாதமாக அமைய வேண்டும் என்று பிரார்த்திக்கின்றேன்.

## தை பிறந்தால் வழி பிறக்கும்; தடைகள் தகரும்!

### சுப்பையா ஆனந்தகுமார் பொங்கல் வாழ்த்து!



தை பிறந்தால் வழி பிறக்கும், தடைகள் தகரும். இந்த பொங்கல் இலங்கைவாழ் மக்களின் வாழ்கையில் புதிய மாற்றங்களையும் எதிர்பார்ப்புகளையும் உருவாக்க வேண்டுமென ஜனாதிபதியின் கீழ் இயங்கும் தொழிற்சங்க முடிவுகளை எடுக்கும் மூவர் அடங்கிய குழுவின் உறுப்பினரும், ஐ.தே.கவின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளருமான சுப்பையா ஆனந்தகுமார் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

"பொங்கல் திருநாள் என்பது தமிழ் பண்பாட்டின் அடையாளமாகும். உழவர்கள் திருநாளாக பொங்கல் உள்ளது. அதற்கு மறுநாள் கால்நடைகளை கௌரவிக்கிறோம். தமிழ் மக்கள் உயிர்நேயவாதிகள் என்பதையே உலகிற்கு இந்த பொங்கல் திருநாள் எடுத்துரைக்கிறது.

எமது வாழ்வியலிலும் உணவுத் தேவையிலும் பெரும் பகுதியை வழங்கும் கால்நடைகளை கௌரவிக்கும் ஒரு திருநாளாகவும் இது உள்ளது. அத்துடன், சமாதானத்தையும் உயிர் சமத்துவத்தையும் போதிக்கும் பொங்கல் நன்நாளில் நாமும் எமது வாழ்வில் மாற்றங்களை ஏற்படுத்திக்கொள்வோம்.

உலகமெங்கும் வாழுகின்ற தமிழர்கள் அனைவரும் அன்பு பொங்க, இன்பம் பொங்க, இனிமை பொங்க மகிழ்ச்சியுடன் கொண்டாடி மகிழும் தைத் திருநாளாம் பொங்கல் திருநாளில், எனதருமைத் தமிழ் மக்கள் அனைவருக்கும் உளமார்ந்த பொங்கல் திருநாள் நல் வாழ்த்துகளை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்." என்றும் சுப்பையா ஆனந்தகுமார், தமது வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

# விமான நிலையங்களின் பாதுகாப்பை பலப்படுத்த கடும் நடவடிக்கைகள்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் உள்ளிட்ட நாட்டிலுள்ள சகல விமான நிலையங்களின் பாதுகாப்பை பலப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக, துறைமுகங்கள் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

அத்துடன்,சகல விமான நிலையங்களினதும் பராமரிப்பு நடவடிக்கைகளை விரிவு படுத்துவதற்கும் விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

புதிதாக பயிற்சிகளை முடித்துக் கொண்டுள்ள 135 பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பயிற்சியை நிறைவு செய்து வெளியேறும் நிகழ்வு இரத்மலானை விமான நிலைய வளாகத்தில் இடம் பெற்றது.இதில், உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.



தற்போது விமான நிலையங்களில் பணிபுரியும் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 1120 என்றும் தெரிவித்த அமைச்சர், அந்த எண்ணிக்கையை 1325 ஆக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

நவீன பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் கட்டமைப்புகள் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நிறுவப்பட்டுள்ளதாக தெரிவித்த அமைச்சர், எதிர்காலத்தில் எந்த ஒரு பொருளோ அல்லது போதைப் பொருள்களையோ சட்டவிரோதமாக எடுத்து வர முடியாதவாறு பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அதே வேளை, பயிற்சிகளை முடித்துக் கொண்டுள்ள பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், எந்த அழுத்தங்களுக்கும் அடிபணியாமல் தமது கடமைகளை முறையாக முன்னெடுப்பர் என, தாம் எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் இதன் போது தெரிவித்துள்ளார்.

# கந்தக்காடு செயற்பாடு வழமைக்கு 15 பேரைத் தவிர ஏனையோர் சரண்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் கைதிகள் தப்பிச்சென்ற விவகாரத்தையடுத்து, ஏற்பட்ட பதற்றம் தணிந்து,தற்போது அங்கு வழமை நிலை ஏற்பட்டுள்ளதாக புனர்வாழ்வு ஆணையாளர் நாயகம் மேஜர் ஜெனரல் தர்ஷன ஹெட்டியாரச்சி தெரிவித்துள்ளார். அங்கிருந்து தப்பிச்சென்ற பதினைந்து கைதிகளைத் தவிர, ஏனைய கைதிகள் மீண்டும் சரணடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். கடந்த 12 ஆம் திகதி பிற்பகல் கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் இரண்டு கைதிகள் குழுவிற்கிடையில் கைகலப்பு ஏற்பட்டது. இதனால், அங்கு பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டு அதிகளவு கைதிகள் தப்பிச் சென்றனர். அத்துடன் அங்கு இடம் பெற்ற மோதலில், காயமடைந்துள்ள கைதிகள் ஆஸ்பத்திரிகளிலும் அனுமதிக்கப்பட்டனர். அந்த வகையில் காயமடைந்தவர்களில் 5 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக அவர் தெரிவித்தார். புனர்வாழ்வு நிலையத்தில் ஏற்பட்ட அமைதியின்மையின் போது நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக, மேலதிக பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் அங்கு வரவைழைக்கப்பட்டதாகவும் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

கைதிகள் இரு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில், 26 பேர் காயமடைந்து வெலிக்கந்தை மற்றும் பொலனறுவை ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்பட்டனர். இச்சம்பவங்களில் 26 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அங்கிருந்து தப்பியோடியிருந்த 25 கைதிகள் கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் சரணடைந்துள்ளனர். தப்பிச் சென்றுள்ள மேலும் கைதிகளை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், அவர்களின் 15 பேர் தவிர்ந்த ஏனையோர் சரணடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# அரசாங்க வாகனங்களுக்கு மட்டுமே வர்த்தமானி அனுமதி

(லோரன்ஸ் செல்வநாயகம்)

வாகன இறக்குமதி தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள புதிய வர்த்தமானி அரசாங்கத்திற்கு தேவையான வாகனங்கள் சிலவற்றை இறக்குமதி செய்வதற்காக மட்டுமே என, நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய நிலையில் பொதுவாக வாகனங்களை இறக்குமதி செய்வதற்காக அந்த வர்த்தமானி வெளியிடப்படவில்லை என்றும் அரசாங்கத்தின் சில நிறுவனங்களுக்கு வாகனங்கள் சில அத்தியாவசியமான தேவையாக காணப்படும் நிலையில், சில வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டே அந்த வர்த்தமானி வெளியிடப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். அத்துடன் வெளிநாட்டு நிதி உதவிகள் மூலம் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் திட்டங்களுக்காக வெளிநாட்டு நிதியுதவியிலிருந்தே, அந்த வாகனங்கள் கொள்வனவு செய்யப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சுக்கு இரண்டு பஸ் வண்டிகள், சுகாதார அமைச்சுக்கு 21 டபள் கெப் வாகனங்கள்,நடமாடும் மகப்பேற்று செயற்பாடுகள் சேவை நடவடிக்கைகளுக்காக மூன்று வாகனங்கள் மற்றும் தொழில் அமைச்சுக்கு ஒரு வாகனமும் இவ்வாறு இறக்குமதி செய்யப்படவுள்ளன.

அத்துடன், இதற்கு மேலதிகமாக ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு விமானப் பயணிகளை விமானத்திலிருந்து இறக்கி அழைத்து வருவதற்குத் தேவையான மூன்று வாகனங்களும் இறக்குமதி செய்யப்படவுள்ளது.

# தமிழ் மக்கள் வாழ்வில் புதிய எதிர்பார்ப்புகள் பிறக்க வேண்டும்

## ஆளுநர் செந்தில் தொண்டமான் பொங்கல் வாழ்த்து

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பது மக்களின் நம்பிக்கை. அந்த நம்பிக்கையுடன் தைப்பொங்கல் திருநாளைக் கொண்டாடுகின்ற அனைவருக்கும் எனது பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான் பொங்கல் வாழ்த்தில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"இலங்கைவாழ் தமிழர்கள் மற்றும் உலக தமிழர்கள் அனைவருக்கும் அறுவடை திருவிழாவான, தைப் பொங்கலை இன்று கொண்டாடுகின்றனர். தை பொங்கல் பண்டிகை தமிழர்களுக்கு புதிய வருடத்தின் தொடக்கமாகவும் உள்ளது. தமிழ்ப் பண்பாட்டின் தனிப்பெரும் அடையாளமான திருநாளாகவும் பொங்கல் திகழ்கிறது.

சூரியனுக்கும் இயற்கைக்கும், கால்நடைகளுக்கும் நன்றி செலுத்த கொண்டாடப்படுகின்ற இந்த தைப்பொங்கல் நாளில், அனைவரும் அன்பு, விட்டுக்கொடுப்பு, சகிப்புத்தன்மை மற்றும் பிறருக்கு உதவி செய்யும் நற்பண்புகளை அனைவரிடத்தும் பகிர்ந்து கொள்ள வேண்டும். தை பொங்கல் சகோதரத்துவத்தையும் சமத்துவத்தையும் அனைத்து உயிர்களும் சமம் என்பதையும் போதிக்கிறது. தை பொங்கலுடன் தமிழ் மக்கள் வாழ்வில் புதிய எதிர்பார்ப்புகள் பிறக்க வேண்டும் என வாழ்த்துக்களை தெரிவித்துகொள்கிறேன்.

# 'அனைவருக்கும் வீடு' திட்டத்தில் 15,000 பேருக்கு கடன் வசதிகள்

(லோரன்ஸ் செல்வநாயகம்)

'அனைவருக்கும் வீடு' அரசாங்கத்தின் வேலைத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் கடன் செயற்பாடுகளில் 15,000 பேருக்கு புதிய கடன்களை பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கை இம்மாத இறுதிக்குள் ஆரம்பிக்கப்படும் என வீடமைப்பு அதிகார சபை தெரிவித்துள்ளது.

வீடுகளை திருத்தும் நடவடிக்கைகளுக்காகவே இந்த வீடமைப்புக்கடன்கள் வழங்கப்படுவதாக தேசிய வீடமைப்பு அதிகார சபையின் தலைவர் ரஜீவ் சூரியாரச்சி தெரிவித்துள்ளார்.

வீடமைப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் வழிகாட்டலில், தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மாவட்ட மட்ட அலுவலகங்கள் மூலம் இந்த வீட்டுக் கடனை பயனாளிகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும்அவர் தெரிவித்துள்ளார்.

இம்முறை வரவு செலவு திட்டத் 06

# யாழ். காரைநகர் கடலில் 12 தமிழக மீனவர் கைது

(யாழ்.விசேட நிருபர்)

யாழ்ப்பாணம் காரைநகர் கடற்பகுதிக்குள் அத்துமீறி நுழைந்து கடற்தொழிலில் ஈடுபட்ட 12 தமிழக கடற்தொழிலாளர்களை, சனிக்கிழமை இரவு கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

காங்கேசன்துறை கடற்படையினர் கடலில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போதே இவர்களை கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களை கடற்தொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகள் ஊடாக ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# தேர்ச்சி மிக்கவர்களாக செயற்பட தைத்திருநாளில் உறுதி பூணுவோம்

## கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார்



தமிழர் பாரம்பரியம் மிகத் தொன்மையானது என்பது உணரப்பட்டிருப்பதால் உலகெங்கும் பரந்து வாழும் தமிழர்கள் இந்நன்றி நாளைக் கொண்டாடி மகிழ்கின்றனர். இலங்கையராக எம்மைப் பொறுத்தவரையில் இத்தைப்பிறப்பு எல்லா வளங்களும் நலன்களும் நிறைந்ததாக அமைய வேண்டும் என்பது எனது பிரார்த்தனையாகும். அடுத்துவரும் சமூக அரசியல் பொருளாதார நகர்வுகளின்போது சிந்தனை மிக்கவர்களாகவும் தேர்ச்சி மிக்கவர்களாகவும் செயலாற்றுவதற்கு முற்படுவோம் என்று இராஜாங்க அமைச்சர்அருணாச்சலம் அரவிந்தகுமார் தைத்திருநா ள் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

தமிழர் பாரம்பரியத்தில் நன்றி பகர்தல் என்பது அன்பையும் மகிழ்ச்சியையும் ஆத்ம திருப்தியையும் வெளிப்படுத்தி நிற்கிறது. அந்தவகையில் உலகுக்கு ஒளி கொடுத்து உணவுக்கு ஆசி வழங்கும் சூரியபகவானுக்கு ஒட்டு மொத்தமாய் நன்றி பகரும் நாளாக தைத்திருநாள் அமைந்திருக்கிறது.


நன்றி பகர்தல் என்ற பதத்துக்கு தமிழர் வரலாறுகள் பறைசாற்றியுள்ளன. நன்றி மறப்பது நன்றன்று என்பதற்கமைய தமிழர்கள் இதனைக் கடைப்பிடித்து வருகின்றனர்.

மலையக சமூகத்தாரின் 200 வருட கால இலங்கை வரலாற்றில் தைத்திருநாள் இரண்டறக் கலந்திருக்கிறது என்று கூறமுடியும். அந்தவகையில் சூரியபகவானுக்கு நன்றி செலுத்தும் இந்நந்நாள் இன்பம் நிறைந்ததாக மகிழ்ச்சி பொங்கியதாக அமைகிறது. இது நாம் இடும் பொங்கலில் பிரதிபலிக்கிறது.

தமிழர் பாரம்பரியம் மிகத்தொன்மையானது என்பது உணரப்பட்டிருப்பதால் உலகெங்கும் பரந்து வாழும் தமிழர்கள் இந்நன்றி நாளைக் கொண்டாடி மகிழ்கின்றனர்.

இலங்கையராக எம்மைப் பொறுத்தவரையில் இத்தைப்பிறப்பு எல்லா வளங்களும் நலன்களும் நிறைந்ததாக அமைய வேண்டும் என்பது எனது பிரார்த்தனையாகும்.

ஆகவே, அடுத்துவரும் சமூக அரசியல் பொருளாதார நகர்வுகளின்போது சிந்தனை மிக்கவர்களாகவும் தேர்ச்சிமிக்கவர்களாகவும் செயலாற்றுவதற்கு முற்படுவோம்.

செழிப்பின் அறுவடை எல்லா உள்ளங்களிலும் பரவட்டும்!
பொங்கல் மணம் முழு தேசத்தையும் நிரப்பட்டும்!

தைப்பொங்கல் பண்டிகையுடன் உதயமாகும் தமிழ்ப் புத்தாண்டு உங்கள் அனைவருக்கும் மகிழ்ச்சியான புத்தாண்டாக அமைய வாழ்த்துக்கள்.

தேசத்தின் வங்கியாளரான இலங்கை வங்கியிடமிருந்து

1975 BOC CALL CENTRE
www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

தினகரன்
THINAKARAN
35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் தை மாதம் 01ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ரஜப் பிறை 03

## குறள் தரும் சிந்தனை



அறைபறை அன்னர் கயவர்தாம் கேட்ட
மறைபிறர்க்கு உய்த்துரைக்க லான்

மறைக்கப்பட வேண்டிய இரகசியம் ஒன்றைக் கேட்ட மாத்திரத்தில், ஓடிச் சென்று பிறருக்குச் சொல்லுகின்ற கயவர்களைத், தமுக்கு என்னும் கருவிக்கு ஒப்பிடலாம்.

# சுபிட்சம் நிறைந்த வாழ்வுக்கு தைத்திருநாள் வழிவகுக்கட்டும்!

உலகெங்கும் வாழ்கின்ற இந்துக்கள் தைப்பொங்கல் திருநாளை இன்று கொண்டாடுகின்றார்கள். உலகநாடுகளை இன்று எடுத்துக் கொண்டால், இந்துக்கள் வாழாத தேசமே இல்லை எனலாம். தமிழ் மக்கள் தான் தற்போது கூடுதலான நாடுகளில் வசித்து வருகின்றனர். அந்நாடுகள் அனைத்திலும் தைப் பொங்கல் பண்டிகை இன்று சிறப்பாகக் கொண்டாடப் படுகின்றது.

தைப்பொங்கல் என்பது இந்துக்களுக்கு மாத்திரம் உரிய பண்டிகையன்று, அது அனைத்து மக்களுக்குமான பொதுப்பண்டிகை என்று கருதுவோரும் உள்ளனர். விவசாயிகள் எங்கெல்லாம் வாழ்கின்றனரோ, அங்கெல்லாம் சூரியபகவானுக்கு நன்றி செலுத்துவதில் தவறில்லை என்பதுதான் பொதுவான கருத்தாகும்.

ஏனெனில் தைப்பொங்கல் என்பது உலகில் உயிரினங்களின் வாழ்வுக்குக் கைகொடுக்கின்ற கதிரவனுக்கு நன்றி செலுத்துவதற்கான தினம் ஆகும். விவசாயிகள் தங்களது உழவுத் தொழிலுக்கு உதவி புரிகின்ற கதிரவனுக்கு வருடத்தில் ஒரு நாளாவது நன்றி செலுத்த வேண்டுமென்ற கருத்தைப் புலப்படுத்துவதாக இப்பண்டிகை அமைகின்றது.

உலகின் பிரதான சக்தி முதல் சூரியன் ஆகும். சூரியன் இன்றேல் உலகில் மாறுபட்ட தட்பவெப்பமும் இல்லை, உயிரினங்களும் இல்லை, உணவு உற்பத்தியும் கிடையாது. அத்தனை உணவுப்பயிர்ச் செய்கைக்கும் கதிரவனே கைகொடுக்கின்றது என்ற உண்மையை எனது ஆன்றோர் அந்நாளிலேயே நன்கறிந்து வைத்துள்ளனர்.

அவ்வாறான கதிரவனை அவர்கள் கடவுளாகப் போற்றி வணங்கினர். அதற்கு நன்றியும் செலுத்திக் கொண்டனர். அப்பாரம்பரியத்தில் உருவானதே சூரியனுக்கு நன்றி செலுத்தும் தைத்திருநாள் ஆகும். கதிரவன் உதயமாகின்ற வேளையில், அதற்குப் பொங்கல் படையலிட்டு நன்றியும் வணக்கமும் செலுத்த வேண்டுமென்பது இந்துக்களின் நம்பிக்கை.

இன்றைய நாள் 'உழவர்களின் பண்டிகை' என்றும் அழைக்கப்படுவதனால், விவசாயத்தின் முக்கியத்துவம் பற்றி சிந்திக்க வேண்டியதும் அவசியமாகின்றது.

எமது நாடு விவசாய பொருளாதாரத்தை முழுமையாகக் கொண்டிருந்த நாடாக முன்னொரு காலத்தில் திகழ்ந்தது. கிராமங்களை எடுத்துக் கொண்டால், அதிகளவு பரப்புள்ள காணிகளில் நெற்செய்கை மேற்கொண்டவர்களே அங்கு செல்வந்தர்களாகத் திகழ்ந்தனர். அவர்களே கிராமங்களில் செல்வாக்கு மிக்கவர்களாகவும் விளங்கினர்.

அந்நாளில் விவசாயம் என்பது கௌரவத்துக்குரிய தொழிலாக விளங்கியது. கிராமத்தின் முதற்பிரஜையாக அதிக நிலமுள்ள விவசாயியே திகழ்ந்தார். கிழக்கிலுள்ள கிராமங்களில் அவ்வாறானவர்கள் 'போடியார்' என்ற பெயரில் இன்றும் அழைக்கப்படுகின்றனர்.

ஆனால் காலம் செல்லச்செல்ல விவசாயிகள் எமது சமூகத்தில் முக்கியத்துவம் அற்றவர்களாக மாற்றமடைந்தனர். கடந்தகால அரசாங்கங்கள் விவசாயத்துக்கு முக்கியத்துவம் வழங்கத் தவறிவிட்டன. அரசாங்கத் தொழில்தான் முன்னுரிமைத் தொழிலாக மாற்றம் பெற்றது. விவசாயத்தில் ஈடுபடுவதென்பது அகௌரவத்துக்குரியதாக மாறிப் போனது. விவசாயிகள் பலர் தமது விவசாயத் தொழிலைக் கைவிட்டனர். அவர்களது பிள்ளைகள் விவசாயத்தைக் கைவிட்டு வேறு தொழில்களை நாடிச் சென்றனர்.

அதன் பலனையே நாம் இன்று அனுபவிக்கின்றோம். அரிசியை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டிய நிலைமைக்கு உள்ளாகியுள்ளோம். மரக்கறிகளை நாம் நெருங்க முடியாதபடி அவற்றின் விலை அதிகரித்துள்ளது. விவசாயத்தின் முக்கியத்துவம் அருகிச் சென்றதே இதற்கான காரணமாகும்.

விவசாயிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு உழவர் திருநாளை கொண்டாடிய சமூகத்தில், விவசாயம் புறக்கணிக்கப்பட்டது வேதனைக்குரியது. இன்றைய தைப் பொங்கல் நாளில் எமது பாரம்பரிய விவசாயம் குறித்து நாம் சிந்திக்க வேண்டியது அவசியம்.

ஆதவனுக்கு நன்றி செலுத்தும் பண்டிகை இதுவென்பதால், இன்றைய பொங்கல் தினம் உலகுக்கே முக்கியத்துவம் வாய்ந்தாகும். 'தை பிறந்தால் வழிபிறக்கும்' என்பது எமது ஆன்றோர் கூறிய வாக்கு ஆகும். தைப் பொங்கல் தினம்தான் தமிழர்களுக்கு புதிய ஆண்டின் முதல் தினமாகின்றது. எனவே புதிய நம்பிக்கைகளுடன் இன்றைய தினத்தை வரவேற்போம்.

இலங்கை மக்களுக்கு கடந்த இரண்டொரு வருடங்கள் சிறப்பான காலப்பகுதியாக அமையவில்லை. கொவிட் பெருந்தொற்று, பொருளாதார நெருக்கடி, ஆட்சி மாற்றம், அரசியல் நெருக்கடி என்றெல்லாம் கடினமான பாதையை நாம் கடந்து வந்துள்ளோம். தற்போது நெருக்கடிகள் படிப்படியாக எம்மைவிட்டு நீங்கி வருகின்றன.

பொருளாதார நெருக்கடியிலிருந்து முற்றாக மீண்டெழுந்து விடலாமென்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. இத்தகைய நம்பிக்கையுடன் இன்றைய தைப்பொங்கல் பண்டிகையும் உதயமாகியுள்ளது.

இன்றைய தைத்திருநாள் பண்டிகையானது இலங்கை மக்கள் அனைவருக்கும் எதிர்கால சுபிட்சத்துக்கான உதயமாக அமையட்டுமென்று வாழ்த்துகின்றோம்.

editor.tkn@lakehouse.lk

# உலக உயிர்களை வாழவைக்கும் கதிரவனுக்கு நன்றி செலுத்தும் தைப்பொங்கல் பண்டிகை

தமிழர்களின் திருநாளாம் தைத்திருநாள். 'தைபிறந்தால் வழி பிறக்கும்'என்பார்கள். உலகெங்கும் பரந்து வாழும் தமிழர்களின் முக்கிய திருநாள் தைப்பொங்கல் ஆகும்.

மார்கழி மாதம் பிறந்து முப்பது நாட்கள் முடிந்த பின்னர் மறுநாள் தை மாதம் பிறக்கின்றது. தமிழர்களின் முக்கியமான திருநாளில் தைமாதம் முதலிடத்தைப் பிடிப்பதோடு, இது முழுமையாக சூரியபகவானுக்கு நன்றி செலுத்தும் நாளாகவே கருதப்பட்டு வருகின்றது.

சோதிட ரீதியாகப் பார்க்கும் போது சூரியபகவான் புதிய ராசியில் பிரவேசிக்கும் நாள் என்று கூறப்படுகின்றது. உலகத்திலுள்ள மக்களின் அன்றாட தேவைகளுள் உணவு முக்கிய இடத்தைப் பெறுகின்றது. உலகிலுள்ள அத்தனை ஜீவராசிகளின் தேவையும் உணவாகவே இருக்கின்றது. எமது மக்கள் வாழ்வதற்கு நெல் அரிசிச்சோறு தேவைப்படுகின்றது.

இதன் நிமித்தம் உழவன் தன் உடம்பை வருத்தி எல்லா மக்களுக்கும் உணவை வழங்குகின்றான் எனவே தைத் திருநாளை உழவர் திருநாள் என்றும் கூறலாம். உழவன் என்பவன் இல்லை என்றால் உலகமே பட்டினியாகும். அந்த விவசாயம் செழிக்க இயற்கை ஒத்துழைக்க வேண்டும். இயற்கை என்னும் போது சூரியபகவான் உலகுக்கு ஒளியூட்ட வேண்டும்.

தை பிறக்கும் நாளன்று எல்லா இந்துக்களின் வீடுகளிலும் அதிகாலையிலேயே துயில் எழுந்து விடுவார்கள். எமது மக்கள் மத்தியில் அக்காலத்தில் வழக்கமொன்று இருந்தது. அதிகாலை ஐந்து மணியளவில் பசுவின் சாணத்தைப் பெற்று வீட்டின் முன்வாயிலில் பூசி மெழுகுவார்கள். அதன் பின்னரே அன்றாடக் கருமங்கள் ஆரம்பமாகும். கிராமங்கள் படிப்படியாக நகரங்களாக மாறிய பின்னர் பாரம்பரியங்களும் மாற்றமடைந்து விட்டன.

கோலம் இடுவது ஊர்வன, எறும்பு போன்றவற்றுக்கு உணவு வழங்குவதற்காகும். வீட்டில் கோலத்தைச் சுற்றி நான்கு புறங்களிலும் கரும்பு போன்றவற்றை நிறுத்தி அதில் மாவிலை, தோரணம் என்பவற்றை தொங்கவிடுவார்கள். பின்னர் வாழையிலையில் பச்சை அரிசியைப் பரப்பி அதன் மீது நிறைகுடம் வைக்கப்படும். இரு மருங்கிலும் மங்கள விளக்கு போன்றவையும் அங்கு வைக்கப்படும்.

சூரியன் உதயமாகிக் கொண்டிருக்கும் போதே பொங்கல் பானை அடுப்பில் ஏற்றப்படும். இந்தப் பொங்கல் அரிசி, பயறு, சீனி, சர்க்கரை, நெய், பால் போன்றவை சேர்க்கப்பட்டு பொங்கப்படும். பொங்கல் பின்னர் படைக்கப்படும்.






அதிகாலை சூரியன் உதித்து வெளிச்சத்தைக் காணும் போது தீபாராதனை காட்டப்படும். அன்று எல்லோரும் சூரிய பகவானை, அந்த இயற்கைக் கடவுளை நன்றியோடு வணங்குவார்கள். இந்நிகழ்வை சூரியபகவானுக்கான திருவிழா என்றே கூற வேண்டும்.அதே நேரம் உலகிற்கு ஒளியூட்டுபவன் என்ற வகையில் உலகில் வாழும் இந்துக்களால் வணங்கப்படும் தெய்வம் என்றும் ஆதவனைக் கூறலாம்.

உழவர்களின் முக்கிய திருவிழாவாக இது கொண்டாடப்படுவதுடன், உழவர்களினால் சேர்த்து வைக்கப்பட்ட புத்தரிசி இட்டு புதுமண்பானை வாங்கப்பட்டு பொங்கல் இடப்படும். இதன் போது வயலிலும் பொங்கல் வைப்பார்கள். வயல்களில் நெல்அறுவடையின் போது நெல்லானது மனிதனுக்கும், வைற்கோலானது பசுவுக்கும் போய்ச் சேருகின்றது. நிலமும் ஏங்கக் கூடாது அதனாலேயே நெல்லின் அடிப்பாகம் நிலத்தோடு விடப்படுகின்றது.

தைத்திருநாளன்று படைக்கப்பட்ட பண்டங்கள் அயல் வீட்டுக்காரர்களுக்கும் வழங்கப்படுகின்றன. அத்தோடு விருந்தினர்கள் சகிதம் தாங்களும் உண்டு மகிழ்வார்கள். இப்படியாக சொந்தங்களும் ஒருவருக்கு ஒருவர் உணவைப் பரிமாறிக் கொள்வார்கள். அன்று மரக்கறி உணவையே உண்பார்கள்.

தமது குடும்பத்தினர் சகிதம் கோயிலுக்குச் செல்வது இந்துக்களின் மரபாகும். புதிய ஆடை தரித்து அர்ச்சனைத் தட்டுக்களுடன் செல்வதைக் காணக்கூடியதாக இருக்கும். இன்றைய தினம் இந்து ஆலயங்களில் விசேட பூஜைகள் இடம்பெறுகின்றன.

தைத்திருநாளின் மறுநாளை மாட்டுப் பொங்கல் என்று கொண்டாடுவார்கள். அதாவது இந்து மக்கள் தாய்க்கு அடுத்த படியாக தங்களுக்கு திரவஆகாரம் தரும் பசுவை ஏற்றுக்கொள்கிறார்கள். இதனால்தான் 'கோமாதா என் குலமாதா' என்கின்றோம்.

எமது நாட்டைப் பொறுத்தவரை கிராமங்களுக்குக் கிராமம் தைப்பொங்கல் பாரம்பரியங்கள் வித்தியாசப்படும். உலகின் பிரதான சக்திமுதலான கதிரவனுக்கு நன்றி செலுத்துவதை இந்துக்கள் அக்காலம் தொட்டு தங்களது பாரம்பரியமாகக் கொண்டுள்ளனர்.

க.மகாதேவன்...
(உடப்பு குறூப் நிருபர்)

# தைபிறந்தால் வழிபிறக்குமென்பது தமிழர்களின் உறுதியான நம்பிக்கை



உலகெங்கும் வாழ்கின்ற தமிழர்கள் தமது வேளாண்மைச் செய்கைக்கு உதவிய இயற்கைக்கு நன்றி சொல்லும் விதமாகக் கொண்டாடப்படும் விழா தைப்பொங்கல் ஆகும். விளைநிலத்தில் விதை விதைத்து, பாத்திக்கட்டி, நீர் விட்டு, நெற்பயிரை வளர்த்து பிறகு அறுவடை செய்து, அதன் பின்னே கிடைக்கும் புதிய நெல்லைக் கொண்டு, புதுப் பானையில் பொங்கலிட்டு, அந்த இனிப்பை அனைவரும் பகிர்ந்து உண்டு மகிழும் விழா தைத்திருநாள் பண்டிகை ஆகும்.

கதிரவனுக்கு நன்றி சொல்லும் மதசார்பற்ற விழாவாக பொங்கல்திருநாள் கருதப்படுகின்றது. நம் முன்னோர் இதனை மிகச்சிறப்பாக மூன்று நாட்களாகப் பிரித்து கொண்டாடி இருக்கிறார்கள்.

முதல் நாள் வேளாண்மைக்குத் தகுந்தாற்போல், வேண்டியபோது வெயிலையும், வேண்டிய போது மழையையும் தந்து உதவிய ஆதவனுக்கு நன்றி சொல்லுதல், இரண்டாம் நாள் வேளாண்மைக்கு உதவிய கால்நடையான நம் வீட்டு விலங்கான மாடுகளுக்கு நன்றி சொல்லுதல், மூன்றாம் நாள் இயற்கையை கண்டுகளித்து மகிழவும், பாரம்பரிய விளையாட்டுகள் என கொண்டாடியும் மகிழ்ந்திருக்கிறார்கள் நம் முன்னோர்.

காலங்காலமாக கிராமங்களில் மட்டும் மிகச்சிறப்பாகக் கொண்டாடப்பட்ட தமிழர்களின் பண்பாடு விழாவான தைத்திருநாள் நகரங்களில் கூட விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. பாடசாலைகள், கல்லூரிகள், தனியார் நிறுவனங்கள் என எங்கும் பொங்கல் விழா கொண்டாடப்படுகிறது.

பாரம்பரிய இனிப்புப்பொங்கல், கரும்புடன் சேர்த்து, பாரம்பரிய உடை அணிந்து, புத்தாடை உடுத்தி கொண்டாடுகிறார்கள்.

சங்க இலக்கியங்களில் தைப்பொங்கல் பற்றி தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

'தைஇத் திங்கள் தண்கயம் படியும்' என்று நற்றிணை கூறுகின்றது.

'தைஇத் திங்கள் தண்ணிய தரினும்' என்று குறுந்தொகையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

'தைஇத் திங்கள் தண்கயம் போல்' என்று புறநானூறு சொல்கின்றது.

'தைஇத் திங்கள் தண்கயம் போல' என்று ஐங்குறுநூறில் எழுதப்பட்டுள்ளது.

'தையில் நீராடி தவம் தலைப்படுவாயோ' என்கிறது கலித்தொகை.

இம்மாதம் (ஜனவரி) முதலாம் திகதியன்று மலர்ந்த 2024 ஆம் வருடம் உலக மக்கள் அனைவராலும் சிறப்பாக வரவேற்கப்பட்டு இரண்டு வாரங்கள் கழிந்த நிலையில் தைத்திங்கள் இன்று உதயமாகியுள்ளது.

தைமாதம் பல்வேறு வகையிலான சிறப்புகளையும், தனித்துவத்தையும் கொண்டது. சூரிய பகவானின் இராசி மண்டல சஞ்சாரத்திற்கு அமையவே ஒவ்வொரு தமிழ் மாதமும் உதயமாகிறது. அந்த வகையில் மகர இராசியில் சூரியன் பிரவேசம் செய்யும்போது தைமாதம் பிறக்கிறது.

தைமாதப் பிறப்பின் சிறப்புக்கு மற்றுமொரு காரணமும் உண்டு. பூவுல மக்களுக்குரிய ஓராண்டு காலம் தேவர்களுக்கு ஒருநாளாக அமைந்துள்ளது. தைமாதம் முதல் ஆனி மாதம் வரையிலான ஆறுமாத காலம் பகற்பொழுதாகும். இது உத்தராயணம் எனப்படுகிறது.

ஆடி மாதம் முதல் மார்கழி மாதம் வரையிலான ஆறுமாத காலம் இரவுப் பொழுதாகும். இது தட்சணாயணம் எனப்படுகிறது. தேவர்களுக்குரிய பகற்பொழுதின் ஆரம்பமே தைமாதப் பிறப்பாகும். எனவேதான் இந்நாள் பூவுல மக்களுக்கு அதிக முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குகிறது.

தைத்திங்கள் பிறப்புடன் இணைந்ததாகவே தைப்பொங்கல் திருநாளும் அமைந்திருப்பது மேலும் சிறப்புக்குரியது. இயற்கைத் தெய்வமாகிய சூரியனின் இயக்கம் செம்மையாக அமையப் பெற்றால்தான் உலகில் மனிதகுலம் மட்டுமல்ல அனைத்து ஜீவராசிகளும், தாவரங்களும் உயிர்வாழக் கூடியதாக இருக்கும். அதாவது உலகம் முழுவதும் உயிர்ப்புடனும், சக்தியுடனும் இயங்குவதற்கு அடிப்படைக் காரணமாகவும், ஆதாரமாகவும் திகழ்வது சூரிய சக்தியாகும்.

உழவுத் தொழிலுக்கு துணையாக அமைந்துள்ள நிலம், நீர், ஆகாயம் எனும் இயற்கைச் சக்திகளின் செயற்பாடுகளுக்கு பேருதவியாக இருக்கும் மிகப் பெரும் சக்தியாகவும், கண்கண்ட தெய்வமாகவும் விளங்கும் சூரிய பகவானை போற்றித் துதிக்கும் வகையில் வருடந்தோறும் நடத்தும் ஒரு வழிபாட்டு நிகழ்வாகவே தைப் பொங்கல் அமைந்துள்ளது.

இன்னொரு வகையில் சொல்வதானால் நன்றி மறவாமையின் தனித்துவத்தை எடுத்துக்காட்டும் பெருவிழாவாகவும் தைப்பொங்கல் சிறப்புப் பெறுகிறது. பயனை அனுபவிக்கும் போது, அந்தப் பயனைப் பெறுவதற்கு உதவிய எவரையும் எதனையும் மறந்து விடலாகாது என்ற உயர்ந்த பண்பையும் தைப்பொங்கல் எடுத்துச் சொல்கிறது.

உழவர் பெருமக்கள், தங்கள் வாழ்வாதாரத்திற்கு உதவும் விவசாய செயற்பாடுகளின் போது நிலத்தில் விதைத்து அறுவடை செய்த நெல்லிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட புத்தரிசியைப் பயன்படுத்தி சூரிய பகவானுக்குப் பொங்கிப் படைத்து தைமாதப் பிறப்பைக் கொண்டாடுவதே தைப்பொங்கல் வரலாற்றின் ஆரம்பமாக அமைந்திருந்தது. இதன் காரணமாகவே உழவர் திருநாள் என்ற பெயரிலும் தைப்பொங்கல் அழைக்கப்பட்டு வந்தது. காலப் போக்கில் இது இந்து மக்களது பண்டிகைகளுள் ஒன்றாக மாறியதால், உழவர் பெருமக்கள் மட்டுமல்ல, அனைத்து இந்து மக்களும் தைமாதம் பிறக்கும் நாளில் சூரிய பகவானுக்கு பொங்கிப் படைத்து வழிபாடு செய்வது வழக்கமாகி விட்டது.



## சுபிட்சம் வேண்டி இன்றைய பொங்கல் திருநாளில் பிரார்த்திப்போம்!

இந்து மக்கள் அனைவரும் தங்கள் வீட்டின் முற்றத்திலேயே பொங்கல் பாரம்பரியங்களை செய்வது வழக்கம். பொங்கி முடித்த பின்னர், அதே இடத்திலேயே தலைவாழை இலையில் பொங்கல் படைத்து வழிபாடு செய்யும் நிகழ்வானது தெய்வ வழிபாட்டின் உன்னத செயற்பாடாகவே அமைந்துள்ளது. இந்த வகையில் பொங்கல் சூரிய பகவானுக்குரிய நைவேத்தியப் பொருளாக சிறப்புப் பெறுவதுடன், அவரது அருளால் பெற்றதை அவருக்கே நன்றியுடன் நிவேதனம் செய்யப்படுவதையும் இது எடுத்துக் காட்டுகிறது.

பொதுவாக, மக்கள் அனைவரும் புதிய நம்பிக்கைகளையும், புதிய எதிர்பார்ப்புகளையும் வைத்து புதுவருடப் பிறப்பை வரவேற்பதுபோலவே, இந்து மக்களும் தைமாதப் பிறப்புக்காக ஆவலுடன் காத்திருப்பது வழக்கமாகும். 'தை பிறந்தால் வழி பிறக்கும், தரணி எங்கும் வளம் செழிக்கும்' என்று பலநூறு வருடங்களுக்கு முன்பதாக நம் முன்னோர் சொல்லி வைத்திருப்பதை இந்து மக்கள் பெரிதும் மதித்துப் போற்றி வருகிறார்கள்.

இந்த வகையில் தங்கள் குடும்பத்தில் இன்பம் பொங்க வேண்டும், செல்வம் செழிப்புற வேண்டும், நோயற்ற வாழ்க்கை அமைய வேண்டும், வாழ்வில் நிம்மதி வேண்டும் என்றெல்லாம் பலவித நம்பிக்கைகளையும், எதிர்பார்ப்புகளையும் வைத்து தைத்திங்களை வரவேற்று சூரிய வழிபாடு செய்வது என்பது ஒரு பாரம்பரிய வழக்கமாகவே நடந்தேறி வருகிறது.

திருமணம், புதுமனை பிரவேசம், புதிய கல்வி நிறுவனங்கள், புது விற்பனை நிலையங்கள், பயிர்ச்செய்கை உற்பத்தி போன்ற பல்வேறுபட்ட சுபகருமங்களை தைமாதத்திலேயே மேற்கொள்வார்கள். தை மாதத்தில் ஆரம்பிக்கும் கருமங்கள் பெரும் வெற்றியையும் சிறப்பையும் கொடுக்கும் என்பதில் இந்து மக்கள் பெரிதும் நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள்.

நம் அத்தனை நெருக்கடிகளும் நீங்கி, எதிர்காலத்தில் அனைவரும் எதுவித நோய் நொடியுமின்றி, மகிழ்ச்சிகரமாகவும், நிம்மதியாகவும் வாழ்வதற்கு உதயமாகும் தைத்திருநாளிலே இறையருளை வேண்டிப் பிரார்த்திப்போமாக!



எஸ்.சேந்தன்...

# இலங்கையில் சமாதானம் நிலவ வேண்டி முகத்துவாரம் மிஸ்பா ஜெபமிஷனரி ஆலயத்தில் இன்று பிரார்த்தனை


இலங்கை தேசத்தின் சமாதானம் வேண்டி கொழும்பு_15, முகத்துவாரம் மிஸ்பா ஜெப மிஷனரி ஆலயத்தின் தலைமைப் போதகர் வண. ஜெயம் சாரங்கபாணி தலைமையில் இன்று (15.01.2024) காலை 8.30 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை உபவாச ஜெப ஒன்றுகூடல் நடைபெறுகின்றது.

இந்த ஒன்றுகூடலில் மூத்த போதகர் ஒன்றியத்தினரும், சபை விசுவாசிகளும் பெருமளவில் கலந்து கொள்கின்றார்கள்.

2024 ஆம் ஆண்டு இலங்கையை அற்புதமாக மாற்றுவதில் இயேசு கிறிஸ்து வல்லவராயிருக்கிறார். இன, மத பேதமின்றி அனைத்து இனமக்களும் இன்றைய ஒன்றுகூடலில் கலந்து ஆசிர்வாதத்தை பெற்றுக் கொள்ள முன்வருமாறு மூத்த போதகர் ஜெயம் சாரங்கபாணி அழைப்பு விடுத்துள்ளார்.

சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகிறேன். உலகம் கொடுக்கின்ற பிரகாரம், நான் உங்களுக்கு கொடுக்கின்றதில்லை.பரி யோவான் (14:27) என்று கர்த்தரின் வாக்குத் தத்தம் இந்தப் புதுவருட காலத்தில் எம்மை திடப்படுத்துகிறது. தை பிறந்தால் வழி பிறக்கும் என்றொரு நம்பிக்கை இருக்கிறது என்று மூத்த போதகர் ஜெயம் சாரங்கபாணி தெரிவித்துள்ளார்.

நாம் விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் காலம் ஓடிக்கொண்டே இருக்கிறது. இது உலக சுழற்சியின் விளைவு. ஆனால் காலத்தை ஆதாயப்படுத்த வேண்டியது அவசியம். அன்று காலத்தை வீணாக்கிய எருசலேமைப் பார்த்து இயேசு, உனக்குக் கிடைத்த இந்த நாளிலாவது உன் சமாதானத்துக்கு ஏற்றவைகளை நீ அறிந்திருந்தாயானால் நலமாய் இருக்குமே என்று கலங்கினார். (லூக்கா 19:42).


வண. ஜெயம் சாரங்கபாணி

ஓடி முடிந்த காலத்தில் நாம் பல்வேறு அனுபவங்களுக்கு முகம்கொடுத்திருக்கலாம். பல்லின மக்கள் வாழும் இந்த ஜனநாயக நாட்டில் வாழ்வது நமக்குப் பெருமையான விடயமே. ஆயினும் துயரங்கள், நெருக்கடிகள், சவால்கள் என்று எமது சமாதானம் குழம்பிப் போவதும் உண்டு. என் பின்னே வாருங்கள். (மத்தேயு 4:19) என்று கர்த்தரின் அழைப்பை புறக்கணிப்பதால் சாத்தான் பல்வேறு வழிகளிலும் எம்மைப் பயன்படுத்திக் கொள்கிறான். இதனால் நாம் சோர்வடைகின்றோம். காலத்தின் பிறப்பின் மேல் எதிர்பார்ப்பை விதைக்கின்றோம். கண்ணீர் துடைக்கப்படாதா என்று ஏங்குகிறோம். அதேநேரம் அடுத்தவர் மேல் பழியைப் போட்டுவிட்டு தப்ப நினைக்கிறோம்.

இங்கேதான் இறைவனின் அடைக்கலம் தேவைப்படுகின்றது. ஏனெனில் உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக என்று (யோவான் 14:1) எமது மனமறிந்து ஆறுதல் தருபவர் அவர் மட்டுமே.

இதற்காக எம்மிடமிருந்து அவர் எதனை எதிர்பார்க்கிறார்?

ஒரு மணி நேரமாவது என்னோடுகூட விழித்திருக்கக் கூடாதா ...' (மத் 26:40) என்று எமது சமாதானத்துக்கான அவர் இதயம் கலங்குகிறார்.

நாம் இறைவனின் அழைப்புக்கு செவிகொடுப்போம். அதற்காக வேண்டி முகத்துவாரம் மிஸ்பா ஜெப மிஷனரி ஆலயம் இன்று (15ஆம் திகதி) உபவாச ஜெப ஒன்றுகூடல் ஒன்றை ஒழுங்கு செய்துள்ளது. தை பிறந்திருக்கும் தனிச்சூழலில் இனி இல்லை இதயவேதனை என்பதை அனுபவித்து உணர அரிய வாய்ப்பு. அனைவரும் இந்த ஜெப ஒன்றுகூடலில் பங்குகொண்டு காலத்தை ஆதாயப்படுத்த ஐக்கியப்படுங்கள். நாட்டுக்கும் இங்கு வாழும் சகல இன சமூகங்களுக்கும் சமாதானம் கிடைத்திட விசுவாசத்தோடு ஜெபிப்போம்.

பூமியிலே நாங்கள் வாழ்கின்ற நாட்களையும், செலவிடும் நேரங்களையும் கர்த்தர் கவனித்துக் கொண்டே இருக்கிறார். மறந்து போகாதீர்கள். ஆன்மீகத் தேடலில் நாம் ஒன்றுதிரள்வோம் வாரீர்!




இயேசு கிறிஸ்து உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக!

மேலதிக விபரங்களுக்கு மிஸ்பா ஜெபமிஷனரி ஆலயம் 187/7, மோதர வீதி, கொழும்பு_15 என்ற முகவரியுடனோ அல்லது தொலைபேசி எண் 0112528355 உடனோ தொடர்பு கொள்ளுமாறு அதன் ஊடகப்பிரிவு கேட்டுக் கொண்டுள்ளது.

# இந்தியாவுக்கு ஆதரவான கட்சி மாலைதீவு தலைநகர் மேயர் தேர்தலில் அமோக வெற்றி!

மாலைதீவில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு எதிராகக் கருத்துகளைக் கூறிய ஆளும் கட்சியினர் அங்கே நடந்த முக்கியமான தேர்தல் ஒன்றில் படுதோல்வி அடைந்துள்ளனர்.

மாலைதீவுக்கும் இந்தியாவுக்கும் இடையில் கடந்த சில வாரங்களாகவே முரண்பாடு நிலவி வருகின்றது. இந்தியப் பிரதமர் மோடி குறித்து மாலைதீவைச் சேர்ந்த துணை அமைச்சர்கள் சிலர் சர்ச்சையான கருத்துகளைக் கூறினர். இது பெரும் விவாதமாக மாறியது.

இதை இந்தியாவில் பலரும் கண்டித்தனர். இதையடுத்து 'மாலைதீவைப் புறக்கணிப்போம்' என்ற ஹேஷ்டேக்கும் இணையத்தில் பரபரப்பானது. இது இரு நாடுகளுக்கும் இடையேயான உறவைக் கடுமையாகப் பாதித்தது.



## பிரதமர் நரேந்திர மோடிக்கு எதிராக கருத்துக் கூறிய ஆளும் கட்சி படுதோல்வி!

இதற்கிடையே தற்போது ஆளும் மாலைதீவு அரசுக்கு அவர்களின் சொந்த நாட்டிலேயே தேர்தலொன்றில் நல்ல அடி கிடைத்துள்ளது. மாலைதீவு தலைநகர் மாலேயில் சமீபத்தில் மேயர் தேர்தல் நடைபெற்றது. அதில் இந்திய ஆதரவு நிலைப்பாட்டை எடுத்துள்ள எதிர்க் கட்சியான மாலைதீவு ஜனநாயகக் கட்சி மிகப்பெரிய வெற்றியைப் பதிவு செய்துள்ளது. இது தற்போது ஜனாதிபதியாக உள்ள முகமது முய்ஸுவுக்கு மிகப்பெரிய பின்னடைவாகப் பார்க்கப்படுகிறது.

ஆளும் கட்சி வேட்பாளரை வீழ்த்தி மாலைதீவு ஜனநாயக கட்சியின் ஆடம் அசிம், மாலேயின் புதிய மேயராக தேர்ந்தெடுக்கப்பட்டார். ஜனாதிபதித் தேர்தலில் வெல்லும் வரை முய்ஸு தான் இந்த பதவியில் இருந்து வந்தமை குறிப்பிடத்தக்கது. கடந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்காக முய்ஸு தனது மேயர் பதவியை ராஜினாமா செய்திருந்தார்.

இத்தனை காலம் முய்ஸு கட்சி வசம் இருந்த மாலைதீவு தலைநகர் மாலே மேயர் பதவி இப்போது எதிர்க்கட்சிகள் வசம் சென்றுள்ளது. அசிமின் மிகப் பெரிய வாக்கு வித்தியாசத்தில் வென்றுள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டுள்ளன. இந்தத் தேர்தலில் வெற்றி பெற்ற ஆடம் அசிம் மாலைதீவு ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவர்.

இந்தக் கட்சிக்குத் தலைமை தாங்கி வரும் முன்னாள் ஜனாதிபதி முகமது சோலிஹ் இந்திய ஆதரவு நிலைப்பாட்டைக் கொண்டுள்ளவர் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் ஜனாதிபதியாக இருந்த சமயத்திலேயே இந்தியா மாலைதீவில் ஏகப்பட்ட முதலீடுகளைச் செய்தது. இரு நாடுகளுக்கும் இடையேயான உறவும் மிகச் சிறப்பாக இருந்தது. ஆனால், கடந்தாண்டு நடந்த ஜனாதிபதித் தேர்தலில் இவரைச் சீன சார்பு தலைவரான முய்ஸு தோற்கடித்திருந்தார்.

அசிம் பல ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றதாக அந்நாட்டு ஊடகங்கள் கூறுகின்றன. இந்த தேர்தலில் மிகக் குறைந்த வாக்குப்பதிவே பதிவாகி இருந்ததும் குறிப்பிடத்தக்கது.

பிரதமர் நரேந்திர மோடிக்கு எதிராக முய்ஸு அரசின் மூன்று துணை அமைச்சர்கள் சர்ச்சையான கருத்துகளைக் கூறியதால் இரு நாடுகளுக்கும் இடையே பிரச்சினை ஏற்பட்ட நிலையில், இந்த மேயர் தேர்தல் முடிவுகள் வந்துள்ளன. அதேநேரம் முய்ஸு இன்னுமே சீன ஆதரவு நிலைப்பாட்டையே எடுக்கிறார். அவர் சமீபத்தில் சீனாவுக்குச் சென்று திரும்பினார்.

# சென்னையில் தரையிறங்குவதற்கு வழியின்றி தவித்த விமானங்கள்!

சென்னையில் நேற்று விமான சேவை கடுமையான பாதிப்பு அடைந்துள்ளது. போகி பண்டிகையால் ஏற்பட்ட புகை மூட்டம் காரணமாக விமான சேவை கடுமையான பாதிப்பு அடைந்தது.


போகி பண்டிகையினால் எங்கும் புகைமூட்டம்!

போகி என்பது நான்கு நாள் பொங்கல் பண்டிகையின் முதல் நாளாகும். மற்றைய மாநிலங்களில் மகர சங்கராந்திக்கு முந்திய நாள் என்று இது அழைக்கப்படுகிறது. ஆந்திரப் பிரதேசம், தெலுங்கானா, கர்நாடகா, தமிழ்நாடு மற்றும் மகாராஷ்டிராவில் பரவலாக போகிப் பண்டிகை கொண்டாடப்படுகிறது.

போகி நாளில், மக்கள் பழைய விஷயங்களைத் தூக்கி எறிந்துவிட்டு, புதிய விஷயங்களில் கவனம் செலுத்தி மாற்றம் அல்லது மாற்றத்தை ஏற்படுத்துவதே குறிக்கோள். விடியற்காலையில், மக்கள் வீட்டில் மரக்கட்டைகள், மற்ற திட எரிபொருள்கள் மற்றும் பயனற்ற மரச்சாமான்களைக் கொண்டு நெருப்பை கொளுத்துவார்கள். இதன் மூலம் ஆண்டுக் கணக்குகள் முடிவடைந்து, மறுநாள் அறுவடையின் முதல் நாளில் புதிய கணக்குகள் தொடங்கும். அதாவது தமிழ்ப் புத்தாண்டும் இதற்கு மறுநாள்தான் தொடங்கும்.

பழையன கழிதலும், புதியன புகுதலுமே பொங்கல் பண்டிகையின் நோக்கம் ஆகும். போகி அன்று பழைய பொருட்களை எரிப்பதால் கடுமையான மாசு ஏற்படுவது வழக்கம். மாசுபாடு புதிய உச்சத்தை அடையும். தமிழ்நாடு முழுக்க நேற்று பழைய பொருட்ளை எரித்து போகிப் பண்டிகையை மக்கள் கொண்டாடினர். இதனால் சென்னையில் கடும் புகைமூட்டம் ஏற்பட்டது. பல பகுதிகளில் பழைய பொருட்களை எரித்து போகி கொண்டாடிய பொதுமக்களால் வீதிகள் தெரியாத அளவிற்கு புகை ஏற்பட்டது. சென்னையில் விமான சேவையும் கடுமையான பாதிப்பு அடைந்துள்ளது. போகி பண்டிகையால் ஏற்பட்ட புகைமூட்டம் காரணமாக கடுமையான பாதிப்பு அடைந்துள்ளது. ஓடுதளம் தெரியாத அளவிற்கு வீதிகளில் புகைமூட்டம் ஏற்பட்டது. சிங்கப்பூர், லண்டன் விமானங்கள் சென்னையில் தரையிறங்க முடியாமல் அவதியுற்றதைக் காண முடிந்தது. ஹைதராபாத் விமானம் தரையிறங்க முடியாமல் திருப்பி அனுப்பப்பட்டது. பலரின் பொங்கல் பயணம் போகி காரணமாக பாதிக்கப்பட்டது. இவர்கள் சென்னைக்கு திரும்புவது சிக்கலாகியுள்ளது.




# ஆரோக்கியமான எதிர்காலத்தை கட்டியெழுப்ப திடசங்கற்பம் கொள்வோம்

அங்கஜன் இராமநாதன்



உலக மக்களுக்கு உணவளிக்கும் உன்னத பணியை ஆற்றி வரும் விவசாயப் பெரு மக்களுடைய வாழ்வில் செழுமை உண்டாக வேண்டும் என யாழ் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும்பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தவிசாளருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார். தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு வெளியிட்ட வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டிருந்தார்.

மேலும் அவர் தனது பொங்கல் வாழ்த்துச் செய்தியில்; உலகலாவிய ரீதியாக உணவுப் பொருட்களுக்கு பாரிய தேவைப்பாடு நிலவி வருகிறது.எமது விவசாயிகள் கடந்த காலத்தில் உரத் தட்டுப்பாடு, விவசாய இரசாயனத் தட்டுப்பாடு என பாரிய நெருக்கடி நிலைமையிலும் கூட அவர்கள் உழைப்பைக் கைவிடவில்லை. அவர்களுடைய கடின உழைப்பே இன்றும் எம்மை வாழவைத்துக் கொண்டிருக்கின்றது.

இயற்கை விவசாயமே நோய் நொடியற்ற நிலையான வாழ்வுக்கு வித்திடும் என்ற உண்மையை அனுபவ ரீதியாக உணர்ந்தவர்கள் எம் மூதாதையர்கள்.

ஆனால் நாம் கால ஓட்டத்தால் எம் மூதாதையர்கள் காட்டிய இயற்கையான வழிகளில் இருந்து சற்று விலகிவிட்டோம்.அந்த தவறை உணர்ந்து மீண்டும் இயற்கை விவசாயத்தை கையிலெடுத்து நோய் நொடியற்ற ஆரோக்கியமான எதிர்கால சமுதாயத்தை கட்டியெழுப்ப இந்த தைப் பொங்கல் தினத்தில் ஒவ்வொருவரும் திடசங்கற்பம் கொள்ள வேண்டும்.

தைப்பொங்கல் தமிழ் மக்களுடையதும்விவசாயிகளதும் பெருமைகளை பறைசாற்றும் பாரம்பரிய பண்டிகை.

இன்று தைப்பொங்கல் பண்டிகையை கொண்டாடும் தமிழ் மக்கள் அனைவருக்கும் எனது தைப்பொங்கல் தின நல்வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மனமகிழ்வடைகிறேன் என மேலும் அவர் தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டிருந்தார்.

# தமிழர் வாழ்வில் சுபிட்சம் மலர்ந்து நிம்மதியான வாழ்வு உருவாக வேண்டும்

பேராசிரியர் திஸ்ஸவித்தாரன



தமிழர்களின் பாரம்பரிய தமிழர் திருநாள் பொங்கல் பண்டிகையை கொண்டாடும் தமிழ் இந்து மக்களுக்கு எனது இதயம் கனிந்த பொங்கல் வாழ்த்தை தெரிவித்துக் கொள்கின்றேன் என லங்கா சமசமாஜக் கட்சியின் பொது செயலாளர் பேராசிரியர் திஸ்ஸவித்தாரன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, தமிழ் மக்கள் வாழ்வில் ஒன்றிணைந்த திருநாட்களில் பொங்கல் விழா பிரதான இடத்தை வகிக்கிறது பல்வேறு கஷ்டங்களை எதிர் கொண்டதமிழ்மக்களுக்கு ஜனவரி மாதம் 14ஆம் திகதி பிறகு தை பிறந்தால் வழிபிறக்கும் என்று தமிழ் மக்கள் கூறுவார்கள் அதனால் இவ் வருடம் தமிழ் மக்கள் வாழ்வில் சுபீட்சம் மலர்ந்து நிம்மதியான வாழ்க்கை அமைய பிராத்திக்கிறேன்.

தற்போது நாட்டில் நிலவும் பொருளாதார கஷ்டத்தை மக்கள் எதிர் நோக்குகின்றனர், பொருளாதார நெருக்கடியில் இருந்து மக்கள் மீள வேண்டுமானால் எமது நாட்டின் பொருளாதாரத்தை மேம் படுத்த மக்கள் அரசியல் பேதங்களை மறந்து கை கோர்த்து செயற்பட வேண்டும்.

அது மட்டும்மல்ல தமிழ் மக்களுக்கு அதிகாரத்தை வழங்கி அம் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்ற லங்கா சமசமாஜகட்சி என்றும் ஆதரவு வழங்கும் என மேலும் தெரிவித்தார்.

# இன்றைய பலன்கள்

## ( 15. 01. 2024 )

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)



**மேஷம்:**
இனிய தைத்திருநாள் வாழ்த்துகள். பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். புதிய ஒப்பந்தங்களும் வந்து சேரும். குடும்பத்தில் ஒன்றுக்கும் மேற்பட்டவர்களின் வருமானம் கிடைத்து மகிழ்ச்சி படுத்தும்.

**ரிஷபம்:**
இனிய தைத்திருநாள் வாழ்த்துகள். பூர்வீக சொத்துக்களை பிரித்துக் கொள்வதில் பிரச்சினைகள் உருவாக்கலாம். உத்தியோகத்தில் வேலை பளு அதிகரிக்கும்.

**மிதுனம்:**
இனிய தைத்திருநாள் வாழ்த்துகள். வரும் மாற்றங்களை ஏற்றுக் கொள்வது உத்தமம். சகோதரருக்குள் இருந்த வாக்கு வாதங்கள் அகலும். பாகப்பிரிவினைகள் சுமூகமாக முடியும்.

**கடகம்:**
இனிய தைத்திருநாள் வாழ்த்துகள். குடும்பத்தில் சலசலப்புகள் ஏற்படாமல் கலகலப்பாக இருக்க விட்டுக் கொடுத்துச் செல்வது உத்தமம்.

**சிம்மம்:**
இனிய தைத்திருநாள் வாழ்த்துகள். தம்பதிகளுக்குள் இருந்த கருத்து வேறுபாடுகள் அகலும். கல்யாண முயற்சிகளில் இருந்த தடை விலகும்.

**கன்னி:**
இனிய தைத்திருநாள் வாழ்த்துகள். பெற்றோர் வழியில் சில பிரச்சினைகளை சந்திப்பீர்கள். கடல் தாண்டி செல்வதில் தாமதங்கள் உருவாகும். புதிய வாகனங்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**துலாம்:**
இனிய தைத்திருநாள் வாழ்த்துகள். முத்தான தொழில்கள் வாய்க்கும் யோகம் உண்டு. முன்னேற்ற பாதையில் அடி எடுத்து வைப்பீர்கள். எதிரிகள் பலம் குறையும்.

**விருச்சிகம்:**
இனிய தைத்திருநாள் வாழ்த்துகள். சிறு சிறு ஆரோக்கிய தொல்லைகள் வந்து அலைமோதும். பங்குதாரர்களின் விரோதத்தால் இதுவரை மூடி கிடந்த தொழில் இப்போது திறக்கப்படும்.

**தனுசு:**
இனிய தைத்திருநாள் வாழ்த்துகள். வெளிநாட்டில் உள்ள நல்ல நிறுவனங்களில் இருந்து உத்தியோகத்திற்கான அழைப்புகள் வரலாம். பணிபுரியும் இடத்தில் பல நாட்களாக இருந்த பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரும்.

**மகரம்:**
இனிய தைத்திருநாள் வாழ்த்துகள். வாழ்க்கைத் துணைக்கு வேலை கிடைத்து அதன் மூலம் உதிரி வருமானங்கள் வரலாம். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**கும்பம்:**
இனிய தைத்திருநாள் வாழ்த்துகள். விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரும். பாக்கியங்கள் வசூல் ஆகி பரவசப்படுத்தும். இடம் பூமி வாங்குவதிலிருந்த பிரச்சினை அகலும்.

**மீனம்:**
இனிய தைத்திருநாள் வாழ்த்துகள். பங்குச் சந்தை,வெளிநாட்டு வணிகத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு வருமானம் திருப்திகரமாக இருக்கும். அதே நேரம் விரயங்கள் கொஞ்சம் கூடுதலாக இருக்கும்.

## ஜனாதிபதித் தேர்தலில்...

மருத்துவராக வருவதற்கு உரிய தகைமை தேவைப்படுவது போன்று, நாட்டை ஆட்சி செய்வதற்கும் நாட்டின் தலைவராவதற்குமான தகைமை மிகவும் அவசியமென குறிப்பிட்டுள்ள அவர், அந்த வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதற்கான தகைமைகளை கொண்டவரென்றும் அவர் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வேட்பாளராக களம் இறங்குவார் என்றும் அவர் தெரிவித்துள்ளார். ஐக்கிய தேசியக் கட்சியின் மாவட்ட மாநாட்டில் ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்த மாநாட்டில் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்குவது அவசியம் என்ற தீர்மானம் முன் வைக்கப்பட்டது. அந்த மாநாட்டில் பங்கேற்ற அனைத்து ஆதரவாளர்களும் அந்த யோசனைக்கு ஏகமனதான இணக்கத்தை தெரிவித்துள்ளனர்.

## சுபீட்சமும், மகிழ்ச்சியும் நிறைந்த...

நம்பிக்கையையும் தைப் பொங்கல் திருநாள் குறிக்கிறது. தமிழ் நாட்காட்டியின்படி, தை மாதத்தில் சூரியன் வடக்குக்கு நகரும்போது, நிகழும் மங்களகரமான அறுவடைக் காலத்தின் ஆரம்பமாக தைத்திருநாள் அமைந்துள்ளது.

இன்றைக்கு ஆயிரம் வருடங்களுக்கு முன்பாக சோழர்களின் ஆட்சிக்காலத்தில், வருடத்தின் முதலாவது அறுவடைக்காக தைப்பொங்கல் பண்டிகை கொண்டாட்டம் ஆரம்பிக்கப்பட்டதாக நம்பப்படுகிறது. அறுவடையின் செழுமைக்கு வித்திட்ட இயற்கை, கால்நடைகள் உள்ளிட்டவற்றுக்கு நன்றி கூறுவதே பண்டிகையின் நோக்கமாகும்.

இரண்டு வருடங்களாக விவசாயிகளின் அர்ப்பணிப்புக்களுக்கு மத்தியில் நாடு வெற்றிப் பாதைக்குள் பிரவேசிக்கும் வேளையில், தைப்பொங்கல் பண்டிகை இம்முறை கொண்டாடப்படுகிறது.

வீழ்ச்சி கண்டிருக்கும் இலங்கையின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதில் விவசாயத்தின் மீது பாரிய நம்பிக்கை கொண்டுள்ளோம்.

விவசாயத்தை நவீனமயப்படுத்துவதன் மூலம் நாடளாவிய ரீதியில் விவசாயத்தில் புதிய மாற்றத்தை ஏற்படுத்தத் தேவையான திட்டங்களை அரசாங்கம் தற்போது செயற்படுத்த ஆரம்பித்துள்ளது. அந்த அனைத்து பணிகளும் வெற்றியளிக்க இம்முறை தைப்பொங்கல் தினத்தில் இயற்கையின் ஆசிர்வாதம் கிட்ட வேண்டுமென பிரார்த்திக்கிறோம்.

## கந்தக்காடு புனர்வாழ்வு நிலைய...

அறிக்கை யொன்றை சமர்ப்பிக்குமாறும் அவர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கியுள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துள்ள அமைச்சர், மேற்படி குழப்பநிலை மற்றும் கைகலப்பு அங்கு வழங்கப்பட்ட மதிய உணவு தொடர்பில் ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ச்சியாக கந்தக்காடு புனர்வாழ்வு மத்திய நிலையத்தில் ஏற்பட்டு வரும் இத்தகைய மோதல்கள் தொடர்பில், இரண்டு தினங்களுக்குள் தமக்கு அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ள அமைச்சர், அங்கு நிர்வாக மாற்றம் ஒன்றை மிக விரைவில் மேற்கொள்ளவுள்ளதாகவும்குறிப்பிட்டுள்ளார்.

## 'பொருளாதார நெருக்கடி' எனும்...

உறுதியான நம்பிக்கை. எனவே, எமது நாட்டை சூழ்ந்துள்ள 'பொருளாதார நெருக்கடி' எனும் இருள் அகன்று, இலங்கை தேசம் முன்னேற்றம் அடையவும், மக்கள் வாழ்வு மேம்படவும் வழி பிறக்கும் என உறுதியாக நம்புகிறேன்."

அமைச்சர் ஜீவன் தொண்டமான் விடுத்துள்ள வாழ்த்து செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

" இன்றைய நவீன உலகில் சூழல் பாதுகாப்பு பற்றி அதிகம் பேசப்படுகிறது. ஐ.நா. சபையில் தீர்மானங்கள் கூட நிறைவேற்றப்படுகின்றன. ஆனால், இற்றைக்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே இயற்கையின் முக்கியத்துவத்தை உணர்த்தியவர்கள்தான் தமிழர்கள். இயற்கை வழிபட்டு, கொண்டாட்டங்களை நடத்தி சுற்றுசூழலை பாதுகாத்தனர். இம்முறையும் இயற்கைக்கு நன்றி கூறி, இனிமையாக தைத் திருநாளை கொண்டாடுவோம்.

## 03 கிலோ ஐஸ் போதையுடன்...

சந்தேக நபர் 30 வயது வத்தளைப் பகுதியைச் சேர்ந்தவரென குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர். கடந்த சனிக்கிழமை (13) இரவு புத்தளம் இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கமைய, இவர் கைது செய்யப்பட்டார் .

இந்நபர் கற்பிட்டியிலிருந்து கொழும்பு நோக்கி பயணித்த பஸ்ஸொன்றில் ஐஸ் போதைப்பொருளை கொண்டு சென்று, பாலாவியிப் பகுதியில் இறங்கி மற்றொரு பஸ்ஸொன்றில் எடுத்துச் சென்றுள்ளார். இதனையடுத்து அவர் பயணித்த பஸ்ஸை குறிஞ்சிப்பிட்டி பகுதியில் வைத்து புலனாய்வு அதிகாரிகள் சோதனையிட்டனர். இதன்போது சூட்சமமான முறையில் மறைத்து வைத்திருந்த 03 கிலோ ஐஸ் போதைப்பொருள் பொதிகளை பொலிஸார் கைப்பற்றினர். இதன் பெறுமதி 03 கோடி ரூபாவிற்கும் அதிகமென அதிகாரிகள் தெரிவித்தனர்.

# அமைதி, சமாதனத்துக்காக அனைவரும் முன்வாருங்கள்

## அகில இலங்கை இந்து மாமன்றம்



இந்த நாட்டில் அமைதியையும் சமாதானத்தையும் நிலைநாட்ட தாமதியாது முன்வருமாறு சகலருக்கும் அறைகூவல் விடுக்கின்றோம் என்று அகில இலங்கை இந்து மாமன்றம் தெரிவித்துள்ளது.

தைப்பொங்கலை முன்னிட்டு இந்து மாமன்றம் விடுத்துள்ள செய்தியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது. அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

தமிழ் மக்களின் தனித்துவமிக்க பண்டிகைகளுள் ஒன்றாக தைப்பொங்கல் பெருமை பெறுகிறது. தைமாதப்பிறப்பு நாளில் சூரிய பகவானுக்கு பொங்கிப் படைத்து வழிபாடு செய்வதன் ஊடாக இந்து மக்கள் தைப்பொங்கலை பக்திபூர்வமாக மட்டுமன்றி, தமிழர் திருநாள் என்ற வகையில் குதூகலமாகவும் கொண்டாடி மகிழ்வது வழக்கம்.

இந்த நாட்டில் அமைதியையும் சமாதானத்தையும் நிலைநாட்ட முன்வருமாறு சகலருக்கும் அறைகூவல் விடுக்கின்றோம். இந்து மக்களை பெரும்பான்மையாகக் கொண்ட தமிழ்பேசும் மக்கள் சுபீட்சத்துடன் வாழ்வதற்கு மலரும் தை மாதத்திலிருந்து வழி பிறக்க வேண்டும். அதற்காகப் பிரார்த்திக்கின்றோம்.

## சுபீட்சமாக வாழும்...

மக்கள் தொன்று தொட்டு கொண்டாடும் தொன்மைத்திருநாள் இது. தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற நம்பிக்கையில் மாற்றம் ஒன்றை எதிர் பார்க்கும் எமது மக்கள், சூரியனுக்கு நன்றி செலுத்தி பொங்கி படைத்து வருகின்றனர். எமது மக்களின் இடர் சூழ்ந்த பொழுதுகளில் எம்முடன் கூடவே இருந்து துயர் தீர்த்தவர்களுக்கும், அழிவுகளற்ற யதார்த்த வழிமுறையில் தம்மை வழி நடத்தி செல்வோருக்கும் நன்றி செலுத்தும் பண்பாட்டையும் எமது மக்கள் வளர்த்தெடுக்க வேண்டும்.குறையின்றி உயிர்கள் வாழவும், மேன்மை மிகு நீதி விளங்கவும் பிறந்துள்ள தைத்திருநாளில் வழி பிறக்கட்டும்.

இலட்சியத்தில் தோற்றால், சூட்சுமத்தை மாற்றுங்கள்,இலட்சியத்தை அல்ல என்ற உபதேசங்களை ஏற்று, தோற்றுப்போன வழிமுறைகளை கைவிட்டு, சகலருக்குமான பொற்காலத்தை விரைவாக வென்றெடுப்போம்.

நாம் நீட்டியிருக்கும் தேசிய நல்லிணக்க கரங்களின் அழைப்பையேற்று, எமது மக்களை நோக்கியும் பதில் கரம் நீட்டும் சாதகமான நிலைமைகள் கனிந்து வந்திருக்கின்றன.

சூழ்நிலைகளை சாதகமாக பயன்படுத்தி மாற்றங்களை உருவாக்குவோம். அறம் வெல்லும். அநீதி தோற்கும். இதுபோல, எமது மக்களின் நம்பிக்கைகளும் வெல்லட்டும்.

## கலால் வரி கட்டணம்:...

அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தன.

இந்நிலையில், மதுபான உற்பத்தி நிறுவனங்கள் அது தொடர்பில் ஆட்சேபனைகளை தெரிவித்து வருகின்ற நிலையிலேயே நிதி இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த 12 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் கலால் வரி அனுமதிப்பத்திர கட்டண அதிகரிப்பை மேற்கொண்டார். இது தொடர்பான அதி விஷேட வர்த்தமானியையும் அவர் வெளியிட்டிருந்தார்.

## எதிர்பார்ப்புகள் நிறைவேறும்...

பெற்றுக்கொள்ளும் எதிர்பார்ப்புடன் சூரிய பகவானுக்கு நன்றி செலுத்தும் இந்த அறுவடைத் திருவிழா தேசத்தின் உயிர்நாடியின் பிரதிபலிப்பாக அமையும்.

இது, தற்போதைய சூழ்நிலைகளுக்கு மத்தியில் உணவுப் பாதுகாப்பு மற்றும் கிராமிய மறுமலர்ச்சி என்ற எண்ணக்கருவுக்கு சிறந்ததோர் உந்து சக்தியாகும்.

எதிர்பார்ப்புகள் நிறைவேறும் வளம் நிறைந்த புத்தாண்டின் விடியலைக் குறிக்கும் தைத் திருநாளைக் கொண்டாடும் உலகெங்கிலும் வாழும் மக்களுக்கு, எனது நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும். இவ்வாறு பிரதமர் தினேஷ் குணவர்த்தன தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

## பால்மா விலைகளில்...

அச்சங்கத்தின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்தார். அதற்கிணங்க இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ பால்மா பக்கற்றின் விலையை 75 ரூபாவாலும் 400 கிராம் பால் மா பக்கற்றின் விலையை 30 ரூபாவாலும் அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## மனிதன், இயற்கைக்கிடையிலான...

சூரிய பகவான் மீதுள்ள அபரிமிதமான நம்பிக்கை மற்றும் மரியாதைக்காக நடத்தப்படும் ஒரு சிறப்பு விழா. தைப்பொங்கல் என்பது மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையிலான பரஸ்பர பிணைப்புக்கு நன்றி தெரிவிக்கும் ஒரு சிறந்த நிகழ்வாகும். இந்துக்களின் ஆன்மீக வாழ்க்கைக்கு நல்ல எண்ணங்களைச் சேர்க்கும் பண்டிகை என்றும் இதை, அழைக்கலாம். புதிய அறுவடையை சூரிய பகவானுக்கு படைத்து, அடுத்து வரும் ஆண்டில் நல்ல அதிர்ஷ்டத்தை கொண்டு வர இத்தினத்தில் வேண்டப் படுகிறது. நாட்டில் உருவாக்கப்பட்ட வங்குரோத்து நிலையால் ஏற்பட்ட சவால்மிக்க ஆண்டின் முடிவில் இன்னும் பல சவால்களுடன் இன்னுமொரு ஆண்டுக்குள் நுழைந்துள்ளோம்.

## ‘அனைவருக்கும் வீடு’...(03ஆம் பக்க தொடர்ச்சி)

தின் மூலம் வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபைக்காக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சுக்காக 7,650 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## தேடப்படும் 42,248...

மாஅதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார். மேற்படி, சந்தேக நபர்களில், 35,505 பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்களும், இதுவரை கைது செய்யப்படாத நிலையிலுள்ள 4,258 சந்தேக நபர்களும், பல்வேறு குற்றச் செயல்கள் தொடர்பில் தேடப்படும் 807 மற்றும் 1,678 சந்தேக நபர்கள் என 2,485 பேரும் உள்ளடங்குவதாக அவர் தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியிலுள்ள அனைத்து பொலிஸ் நிலையங்களும் யுக்திய நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட வேண்டுமென ,பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் பணிப்புரை விடுத்துள்ளார். மேற்கண்ட மூன்று பட்டியலுடன் தொடர்புடைய சந்தேக நபர்களை அடுத்த ஒரு மாத காலத்திற்குள் சட்டத்தின் முன் நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.இதற்கிண ங்க சகல குற்றத்தடுப்பு பிரிவின் அதிகாரிகளையும் 24 மணி நேரமும் பணியில் ஈடுபடுத்த வேண்டும் என்றும் பதில் பொலிஸ் மா அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

## ரூ. 1,600 கோடி பெறுமதியான...

தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற விசேட செய்தியாளர் மாநாட்டிலே, அமைச்சர் இதனைத் தெரிவித்தார். அங்கு மேலும் விளக்கமளித்த அமைச்சர், கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று தேசிய பத்திரிகையொன்று இலவசமாக இந்தியா வழங்கும் எஞ்ஜின்களை பார்வையிடுவதற்காக இலங்கையிலிருந்து 65 பேர், இந்தியா சென்றதாக பொய்யான செய்தியொன்றை பிரசுரித்துள்ளது. இது தொடர்பில் நான் கவலையடைகிறேன். நீண்டகாலமாக பொதுப் போக்குவரத்துச் சேவையை வழங்கும் ரயில் சேவை, மிக மோசமான நிலையில் வீழ்ச்சியடைந்தது. இந்நிலையில் அதனை முன்னெடுத்துச் செல்வதற்கு முடியாத நிலை காணப்பட்டது. நீண்டகாலமாக ரயில் திணைக்களம் நட்டமீட்டி வருவதால் அதனை மீள் முதலீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாமல் போனது. பெரும்பாலான ரயில் சேவை அபிவிருத்தி நடவடிக்கைகள் வெளிநாட்டுக் கடன்கள் மூலமே மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ரயில் பாதை புனரமைப்பு, ரயில் எஞ்ஜின்கள் கொள்வனவு மற்றும் தேவையான உதிரிப்பாகங்களையும் வெளிநாட்டுக் கடன் மூலமே பெற வேண்டியுள்ளது. கொழும்புத் திட்ட உதவி, கனேடிய உதவி, இந்திய கடனுதவித் திட்டம், ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் மூலமாகவே எமது ரயில் சேவையை முன்னெடுத்துச் செல்வதற்கான கடன்கள் பெறப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.


இலங்கை சனநாயக சோசலிச குடியரசு
நீர்ப்பாசன அமைச்சு

**மஹாவலி நீர்ப்பாதுகாப்பிற்கான முதலீட்டுத் திட்டம்**
**(MWSIP)**
**திட்ட முகாமைத்துவ பணிமனை**
நிதியிடல்: ஆசிய அபிவிருத்தி வங்கி – **Loan 3267-SRI/3268-SRI-Tranche 1**

**பிரதான தகைமைகளுக்கான மீள்திருத்தம்**
**திறந்த போட்டிரீதியிலான விலைமனுக்கோரல்**

**நீர் வழுங்கல் அடங்கலாக பொல்பித்திகம PIU அலுவலக இடப்பரப்பில் விருந்தினர் இல்லம் இல. 1 மற்றும் விருந்தினர் இல்லம் இல.2 ஆகியவற்றின் மீதி வேலையின் நிருமாணம்**
**MI/MWSIP/ADB/WKS/Guest Houses-NWP ICB/2023/041**


1. இந்த விலைமனுக்கோரலில் பின்வரும் பிரதான தகைமைகளையுடைய தகுதியுள்ள விலைமனுதாரர்கள் மாத்திரமே பங்குபற்றுவதற்கு அழைக்கப்படுகின்றனர்.

- 2021 டிசம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடையும் உடனடியான கடந்த ஐந்து (5) வருடங்களுள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அல்லது பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தங்களுக்காக பெற்றுக் கொண்ட சான்றழிக்கப்பட்ட மொத்த தொகையாக கணக்கிடப்பட்ட வருடாந்த ஆகக் குறைந்த சராசரி நிர்மாண நிதிப்புரள்வான தொகையான 170 மில்லியன் இலங்கை ரூபாவை விலைமனுதாரர் கொண்டிருத்தல் வேண்டும்.
- விலைமனுதாரரின் பங்குபற்றும் பெறுமதியானது 45 மில்லியன் இலங்கை ரூபாவிற்கு மேற்படின் விலைமனுதாரர் ஒப்பந்தக்காரரொருவராக, கூட்டு முயற்சி பங்குதாரராக அல்லது உப ஒப்பந்தக்காரராக ஆகக் குறைந்தது ஒரு (1) ஒப்பந்தத்தில் உடனடியாக கடந்த ஏழு (7) வருடங்களில் திருப்திகரமாக அல்லது போதுமானளவு மற்றும் உத்தேசிக்கப்பட்டுள்ள வேலைகளின் நிகரான தன்மையிலுள்ளதாக இருத்தல் வேண்டும். விலைமனுதாரரின் பங்குபெறுதலானது விலைமனுக்கோரல் ஆவணத்தின் 6 ஆம் பிரிவில் (தொழில் வழங்குனரின் தேவைப்படுத்தல்கள்)விபரிக்கப்பட்டவாறு விலைமனுதாரரின் பங்குபெறுதலின் ஒற்றுமையானது வேலைகளின் பௌதீக அளவு மற்றும் வேலைகளின் தன்மை, நிருமாண முறைகள், தேவைப்படும் நிருமாண தொழில்நுட்பவியல், நிருமாண வேலைகளின் பௌதீக அளவு மற்றும் வேலைகளின் தன்மை அல்லது விலைமனுக்கோரலின் 6 ஆம் பிரிவில் விபரிக்கப்பட்டவாறு (தொழில்வழங்குனரின் தேவைப்படுத்தல்கள்) ஏனைய குணவியல்புகள் இருத்தல் வேண்டும். விலைமனுதாரரானவர் வேலைகள் தொடர்பான திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ள தொழில்நுட்ப செயற்பாடுகள் தொடர்பான மேலதிக அனுபவத்தையும் திருப்தியடையச் செய்தல் வேண்டும்.

**திட்டப் பணிப்பாளர்,**
**திட்ட முகாமைத்துவ பணிமனை,**
**மஹாவலி நீர்ப் பாதுகாப்பு முதலீட்டுத் திட்டம்,**
**இல. 493 1/1, T.B. ஜாயா மாவத்தை,**
**கொழும்பு-10,**
**இலங்கை.**
**தொலைபேசி இல.: +94 11 2675810/ + 94 11 2675882**
**தொலைநகல் இல.: +94 11 2675227**
**மின்னஞ்சல் முகவரி: ebid.mwsip@gmail.com**







# இறை பிரார்த்தனையுடன் வாழ்த்து, நல்லாசிகள்



இறை பிரார்த்தனையுடன் வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் பகிர்ந்து கொள்கிறோம். தமிழ் மக்களின் அறுவடைப்பண்டிகை விழாவாக, உழவர் திருநாளாக, தைத்திருநாள் காணப்படுகிறது. சமய ரீதியாக நாம் பார்க்கும் போது எம்மிடம் இல்லாதது எதுவும் இல்லை. வாழ்வியலின் அடிப்படைகளாக சமயநெறி காணப்படுகிறது. அன்பினையும் பண்பினையும் நனி நன்றிகள் பகிர்ந்து கொள்ளும் பாங்கினையும் அறச் சிந்தனைகளுடன் தர்மத்தினை போதித்து நிற்கிறது. இவ்வகையில் தான் உழவர் பெருமக்கள் சூரிய பகவானுக்கும் தொடர்ந்து விவசாயத்திற்கு உதவிய கால்நடைகளுக்கும் நன்றிகள் பகிர்ந்து கொள்ளும் பாங்கினையும் உணர்த்துவதாக காணப்படுகிறது. எமது சங்க இலக்கியங்களான "தைஇத் திங்கள் தண்கயம் படியும்" என்று நற்றிணையிலும் "தைஇத் திங்கள் தண்ணிய தரினும்" என்று குறுந்தொகையிலும் ""தைஇத் திங்கள் தண்கயம் போல்" என்று புறநானூற்றிலும் "தைஇத் திங்கள் தண்கயம் போல" என்று ஐங்குறுநூற்றிலும் "தையில் நீராடி தவம் தலைப்படுவாயோ" என்று கலித்தொகையிலும் குறிப்புகள் காணப்படுகின்றன.

இத்தருணத்தில் அனைத்து மக்களும் வாழ்வில் சகல செல்வங்களும் பெற்று வளமும் நலமும் பலமும் பெற்று இன்பகரமாக வாழ அன்பே உருவான பரம்பொருளின் பாதம் பணிந்து பிரார்த்தனை செய்து மனமார்ந்த நிறைந்த நல்வாழ்த்துக்களையும் நல்லாசிகளையும் இந்துக் குருமார் அமைப்பின் சார்பில் பகிர்ந்து மகிழ்ச்சி அடைகிறோம்.

சிவாகமகலாநிதி.
**சிவஸ்ரீ. கு.வை. க. வைத்தீஸ்வர குருக்கள்.**
தலைவர்,
**சிவஸ்ரீ. ச. சாந்தரூப குருக்கள். செயலாளர் இந்துக் குருமார்**
அமைப்பு.

# மக்கள் வாழ்வில் மாற்றம் ஏற்படுமென நம்புகின்றேன்

*நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்*



மலையக பெருந்தோட்ட சமூகத்தின் 200 வருட கால வரலாற்றை எடுத்துக்கொண்டால், போராட்டம் செய்துதான் உரிமைகளை பெற வேண்டியிருந்தது. இந்நிலையில் தான் தை பிறக்கின்றது. "தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். அந்த நம்பிக்கையில் முதலாவதாக சூரிய பொங்கல் வைத்துதான் வேலையை ஆரம்பிப்பார்கள். அதனால் சூரியனைப் போன்று தோட்ட சேவையாளர்களின் வரழ்விலும் பிரகாசித்து நல் வாழ்வு வாழ்வதற்கான சூழ்நிலை 2024 ஏற்பட வேண்டுமெனவும் பொதுவாக பெருந்தோட்ட மக்களின் வாழ்விலும் மாற்றம் ஏற்பட வேண்டுமென இலங்கை தோட்ட சேவையாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ரொபட் பிரான்சீஸ் பொங்கல் திருநாளை முன்னிட்டு விடுத்துள்ள வாழ்த்து செய்தியில் தெரிவி்த்துள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, இந்த நாட்டின் பொருளாதாரத்திற்கு முக்கிய பங்கு வகிப்பது தேயிலை, இறப்பர் ஆகும். கடந்த காலத்தை மறந்து புதிய ஆண்டில் பெருந்தோட்ட ஊழியர்கள் வாழ்வில் மாற்றம் ஏற்படும் என்ற நம்பிக்கையுள்ளது.

# தைத் திருநாள் இன்று




நமது கலாசாரத்தில் பெரும்பாலும் எந்த ஒரு நல்ல செயலையும் தை மாதத்தில் ஆரம்பிப்பது என்பது பழங்காலத்தில் இருந்து வரும் பழக்கம் ஆகும். இம்மாதத்தில் தான் சூரியன் வட அரைக் கோளப் பகுதியில் பயணத்தை ஆரம்பிக்கும் உத்திராண்ய காலம் ஆரம்பமாகிறது.

ஆடி மாதத்தில் விதைத்த நெல்லானது தை மாதத்தில் தான் அறுவடை செய்யப்படுகிறது. எனவே இது அறுவடை மாதம் என்றும் அழைக்கப் படுகிறது. அறுவடையால் மகிழ்ச்சி மிகுந்த மக்கள் தங்கள் கடவுள்களுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக இம்மாதத்தில் பல்வேறு விழாக்களைக் கொண்டாடுகின்றனர்.

பல்வேறு வழிபாட்டு முறைகளும் இம் மாதத்தில் பின்பற்றப்படுகின்றன.

மக்கள் தைப்பொங்கல், மாட்டுப்பொங்கல், காணும் பொங்கல், திருவள்ளுவர் தினம், தைப் பூசம், தை அமாவாசை, ரத சப்தமி போன்ற விழாக்களையும், சபலா ஏகாதசி, புத்ரதா ஏகாதசி, பைரவ வழிபாடு, வீரபத்திரர் வழிபாடு, சாவித்ரி கௌரி விரதம் போன்ற வழிபாட்டு முறைகளையும் இம்மாதத்தில் பின்பற்றுகின்றனர்.

இந்த நாளில் அதிகாலையில் எழுந்து புதிய நெல்லில் இருந்து தயார் செய்யப்பட்ட அரிசியில் சர்க்கரை மற்றும் வெண் பொங்கல் ஆகியவற்றை தயார் செய்து பொங்கல், செங்கரும்பு, புதுமஞ்சள், பனங்கிழங்கு, காய்கறிகள், பருப்பு வகைகள், பழவகைகள் ஆகியவற்றை சூரிய தேவனுக்கு படையலிட்டு பொங்கலோ பொங்கல் என்று மகிழ்ச்சியுடன் ஆராவாரம் செய்து வழிபாடு மேற்கொள்கின்றனர்.

# யுகரிஷியின் ஆன்மிகச் சிந்தனைகள் - அத்தியாயம் 71



தவறான கண்ணோட்டம் கொண்ட ஒருவன், சாதாரண துன்பத்தைக் கூட, தன் தவறான மதிப்பீட்டால், மிகப் பெரிய துன்பமாகக் கருதி கவலைப்படுகிறான். கவலை வளர்த்துக் கொள்கிறான். சின்னக் குறைபாடு அல்லது சின்னளவில் உடல் நல மின்மை அல்லது சிறிய கடுகு அளவு பாதகமான சூழ்நிலை வந்தாலும் மலையளவு நினைத்து பயம் கொள்கிறான். தேவையின்றி கலங்குகிறான். மன வலிமையை பொறுத்தே சூழ்நிலைகளின் தாக்கம் அமையும். காய்ந்த விறகுக் கட்டையில் நெருப்பு எளிதில் பற்றிவிடும். ஆனால் ஈரமான விறகுக் கட்டையில் நெருப்பு அவ்வளவு எளிதாகப் பற்றாது.

பலவீனனை தாக்கும் அளவிற்கு நோய் பலமுள்ளவனை தாக்காது. வறண்ட நிலம் நீரை உறிஞ்சும் அளவிற்கு ஈரமான நிலம் உறிஞ்சுவதில்லை. மெல்லிய, வெள்ளை துணியில் சாயம் ஏறும் அளவிற்கு கடினமான அழுக்கு துணியில் ஏறுவதில்லை. அதே போல் பலவீனமானவன் பாதகமான சூழ்நிலையை கூட தாங்கிக்கொள்ளும்மனவலிமை இன்மையில் கவலைப் படுகிறான் அல்லது துன்பப்படுகிறான்.

உலகத்தில் வெற்றி, அழகு, சுகம், அமைதி பெற விரும்புவன் தனக்கு எதிரான பாதகமான சூழ்நிலையினை. சரியான கண்ணோட்டத்துடன் நோக்கி எதிர் கொண்டு, தமக்கு சாதகமான சூழ்நிலையாக மாற்றிக் கொள்ள முடியும்.

அதற்கு பயிற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். இல்லை என்றால் உலகின் அனைத்து பொருட்களும். வாழ்வில் தான் சந்திக்கும் அனைத்து சூழ்நிலைகளையும் கண்டு கலங்கி பயந்து சுகத்தையும் அமைதியையும் இழந்துவிடுவான்.

# அறநெறி அறிவுநொடி



**கே. ஈஸ்வரலிங்கம்**
**தமிழர் நற்பணி மன்றத் தலைவர்**

*19520. திருவள்ளுவருக்குரிய வேறு பெயர்கள் என்ன?*
**தெய்வப்புலவர்', 'பொய்யில் புலவர்', 'நாயனார்', 'தேவர்', 'செந்நாப்போதர்', 'பெருநாவலர்', 'பொய்யா மொழிப் புலவர்'**

*19521. திருவள்ளுவர் வாழ்ந்த காலம் எது?*
**2 ஆம் நூறாண்டு முதல் 8 நூற்றாண்டு வரையிலான இடைப்பட்ட காலம்**

*19522. திருவள்ளுவர் பிறந்த இடம் எது?*
**மயிலாப்பூர்**

*19523. திருக்குறளை சிறப்பிக்கும் வேறு பெயர்கள் என்ன?*
**'உலகப் பொது மறை', 'முப்பால்', 'ஈரடி நூல்', 'உத்தரவேதம்', 'தெய்வநூல்', 'பொதுமறை', 'பொய்யா மொழி', 'வாயுறை வாழ்த்து', 'தமிழ் மறை', 'திருவள்ளுவம்'**

*19524. ஈரடிகளில் உலகத் தத்துவங்களை சொன்னதால் இதற்கு ஏற்பட்ட பெயர் என்ன?*
**'ஈரடி நூல்'**



# பொதுமக்களிடம் மன்னிப்பு கோருதல்

இல. 34, வெல்கம் விலேஜ், சிங்ககம, தூவகொட, ஹல்கெந்தவில, பயாகலயில் வசிக்கும் S.K. தனுஷ்க நிரோஷன ஆகிய நான் மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபையினால் வழங்கப்படும் அனுமதிப்பத்திரம் இல்லாமல் ப்ரிகபெலின் (Pregabaline) எனும் 10 மாத்திரைகளை சில்லறை விலைக்கு விற்ற குற்றத்திற்காக களுத்துறை நீதவான் நீதிமன்றத்தில் 42613ஆம் இலக்க வழக்கில் குற்றவாளியாக்கப்பட்டேன் என்பதுடன் 20,000.00 ரூபா தண்டம் விதிக்கப்பட்டது என்பதுடன் இனிமேல் இவ்வாறான குற்றத்தை செய்யமாட்டேன் எனவும் செய்த குற்றத்திற்காக பொதுமக்களிடம் மன்னிப்பு கேட்பதாக அறிவிக்கின்றேன்.

## பெயர் மாற்றம்

கொழும்பு மாவட்டத்தின் மொறட்டுவ பிரதேச செயலகப் பிரிவின் இல. 01ஏ, உஸ்வத்த 02ஆம் ஒழுங்கை, மொறட்டுவ முகவரியில் வசிக்கும் வெலிவத்தகே தோன சேஷானி மதுவந்தி என்ற பெயரில் அறியப்பட்ட நான் இதன் பின்னர் ஆதிரா அகீல் ஒசன் என்ற பெயரில் அறியப்படுவதாக இலங்கை குடியரசுக்கும் மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

**- ஆதிரா அக்கில் ஒசன்**

**Repeat Your ad For Better Offers**

**இலங்கை சனநாயக சோசலிச குடியரசு**
**நீர்ப்பாசன அமைச்சு**

## மஹாவலி நீர்ப்பாதுகாப்பிற்கான முதலீட்டுத் திட்டம் (MWSIP)

**திட்ட முகாமைத்துவ பணிமனை**

நிதியிடல்: ஆசிய அபிவிருத்தி வங்கி – **Loan 3267-SRI/3268-SRI-Tranche 1**

**விலைமனு மூடும் திகதியின் நீடிப்பு மற்றும் பிரதான தகைமைகளுக்கான மீள்திருத்தம்**
**திறந்த போட்டிரீதியிலான விலைமனுக்கோரல்**

**தும்மியவிலிருந்து சியம்பளன்கமுவ வரையிலும் தற்போதுள்ள யானைக்கான வேலியை (3.2 கிமீ) அகற்றல், தற்போதுள்ள யானைக்கான வேலியை (42.9கிமீ) பழுதுபார்த்தல் மற்றும் புதிய மின்சார வேலியை (4.61கிமீ) நிர்மாணித்தல்**
**MI/MWSIP/ADB/WKS/ELE-NWP ICB 1/NCB/2023/040**

2023.12.20 ஆம் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட மேற்கூறப்பட்டுள்ள வேலைக்கான விலைமனுக்கான அழைத்தலில் பின்வரும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதென தயவு செய்து அறிந்து கொள்ளவும்.

1. விலைமனுவை சமர்ப்பிப்பதற்காக நீடிக்கப்பட்ட திகதி மற்றும் நேரம்: 2024.01.24 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு (உள்ளூர் நேரம்)

   2024 சனவரி 24 ஆம் திகதியன்று பி.ப. 2.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக (உள்ளூர் நேரம்) கிடைக்கும் தன்மையில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும்.

2. இந்த விலைமனுக்கோரலில் பின்வரும் பிரதான தகைமைகளையுடைய தகுதியுள்ள விலைமனுதாரர்கள் மாத்திரமே பங்குபற்றுவதற்கு அழைக்கப்படுகின்றனர்.
   - 2021 டிசம்பர் 31 ஆம் திகதியன்று முடிவடையும் உடனடியான கடந்த ஐந்து (5) வருடங்களுள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் அல்லது பூர்த்தி செய்யப்பட்ட ஒப்பந்தங்களுக்காக பெற்றுக் கொண்ட சான்றழிக்கப்பட்ட மொத்த தொகையாக கணக்கிடப்பட்ட வருடாந்த ஆகக் குறைந்த சராசரி நிர்மாண நிதிப்புரள்வான தொகையான 170 மில்லியன் இலங்கை ரூபாவை விலைமனுதாரர் கொண்டிருத்தல் வேண்டும்.
   - விலைமனுதாரரின் ஆகக்கூடியதான நான்கு நிகரான ஒப்பந்தங்களில் பங்குபற்றும் பெறுமதியானது 20 மில்லியன் இலங்கை ரூபாவிற்கு மேற்படின் விலைமனுதாரர் ஒப்பந்தக்காரரொருவராக, கூட்டு முயற்சி பங்குதாரராக அல்லது உப ஒப்பந்தக்காரராக ஆகக் குறைந்தது ஒரு (1) ஒப்பந்தத்தில் உடனடியாக கடந்த ஏழு (7) வருடங்களில் திருப்திகரமாக அல்லது போதுமானளவு மற்றும் உத்தேசிக்கப்பட்டுள்ள வேலைகளின் நிகரான தன்மையிலுள்ளதாக இருத்தல் வேண்டும். விலைமனுதாரரின் பங்குபெறுதலானது விலைமனுக்கோரல் ஆவணத்தின் 6 ஆம் பிரிவில் (தொழில் வழங்குனரின் தேவைப்படுத்தல்கள்)விபரிக்கப்பட்டவாறு விலைமனுதாரரின் பங்குபெறுதலின் ஒற்றுமையானது வேலைகளின் பௌதீக அளவு மற்றும் வேலைகளின் தன்மை, நிருமாண முறைகள், தேவைப்படும் நிருமாண தொழில்நுட்பவியல், நிருமாண வேலைகளின் பௌதீக அளவு மற்றும் வேலைகளின் தன்மை மற்றும் ஏனைய குணவியல்புகள் இருத்தல் வேண்டும். விலைமனுதாரரானவர் வேலைகள் தொடர்பான திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ள தொழில்நுட்ப செயற்பாடுகள் தொடர்பான மேலதிக அனுபவத்தையும் திருப்தியடைய செய்தல் வேண்டும்.

**திட்டப் பணிப்பாளர்,**
**திட்ட முகாமைத்துவ பணிமனை,**
**மஹாவலி நீர்ப் பாதுகாப்பு முதலீட்டுத் திட்டம்,**
**இல. 493 1/1, T.B. ஜாயா மாவத்தை,**
**கொழும்பு-10,**
**இலங்கை.**
**தொலைபேசி இல.: +94 11 2675810/ + 94 11 2675882**
**தொலைநகல் இல.: +94 11 2675227**
**மின்னஞ்சல் முகவரி: ebid.mwsip@gmail.com**

The Housewives' companion
Classifieds on
Daily News

CDU/TS/2024/01 & 02

## இலங்கை சுங்கம்

# கையகப்படுத்தப்பட்ட பண்டங்களின் கேள்வி விற்பனை

கையகப்படுத்தப்பட்ட வாகனங்கள்/ தங்கம்/தங்க ஆபரணங்கள்/ மின்னியல்/ இலத்திரனியல் சாதனங்கள் மற்றும் சில நானாவித பண்டங்கள் ஆகியனவற்றின் கேள்வி விற்பனையானது இலங்கை சுங்க மத்திய அகற்றல் பணியகத்தில் 2024 சனவரி 19 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு நடைபெறும்.

விற்பனை செய்யப்படவுள்ள பண்டங்களின் பட்டியலை 2024 சனவரி 16ஆம், 17ஆம் மற்றும் 18ஆம் திகதிகளில் மு.ப. 10 மணியிலிருந்து பி.ப. 3.30 மணி வரையும் மீளளிக்கப்படாத தொகையாகிய 25 ரூபாவைச் செலுத்திய பின்னர் இலங்கை சுங்க 3ஆம் மாடியின் மத்திய அகற்றல் பணியகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

மேலும், விற்பனையாகவுள்ள பண்டங்களின் பட்டியலானது 2024 சனவரி 15ஆம் திகதியிலிருந்து www.customs.gov.lk என்ற சுங்க உத்தியோகபூர்வ இணையதளத்தில் காட்சிப்படுத்தப்படும்.

மேலதிக விபரங்கட்கு பின்வரும் இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

011-2430795
011-2143434 நீடிப்பு 7300

**சுங்க பணிப்பாளர் நாயகம்,**
**இலங்கை சுங்கம்,**
**'சுங்க இல்லம்',**
**இல.: 40, பிரதான வீதி,**
**கொழும்பு-11.**

## இலங்கை வங்கி

# மருதமுனை கிளைக்கு பொருத்தமான கட்டடமொன்று தேவைப்படுகின்றது

**உத்தேசக் கட்டடம் பின்வரும் வசதிகளைக் கொண்டிருத்தல் வேண்டும்**

- கட்டடமானது சட்டப்படியாக நிர்மாணிக்கப்பட்டதாக இருத்தல் வேண்டும் என்பதோடு 10 வருடங்களுக்கு மேற்பட்டதாக இருத்தல் ஆகாது.
- பிரதான வீதிக்கான முகப்பானது ஆகக்குறைந்தது 40 அடியாகவும் அது நகர எல்லைகளுக்குள் அமைந்திருத்தல் வேண்டும்.
- ஆகக் குறைந்தது 06 வாகனங்களை நிறுத்தி வைக்கக்கூடிய வாகனத் தரிப்பிடம் இருத்தல் வேண்டும்.
- தரைப்பரப்பானது ஆகக் குறைந்தது 2500 இலிருந்து 3500 சதுர அடியாகவிருத்தல். கட்டடமானது இரு மாடியாகவிருந்தால், தரை மாடியானது ஆகக் குறைந்தது 2000 சதுர அடியைக் கொண்டிருத்தல்.
- 60 Amp 3 வழி (phase) மின்சாரம், நீர் வழங்கல், ஸ்ரீலங்கா ரெலிகொம் தொலைபேசி இணைப்புக்கள், ஆண்கள் மற்றும் பெண்களுக்கான தனித்தனியான கழிவறைகள், அவசர வெளிச்செல்லல் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகள்.
- கட்டடத்தின் தரைப்பரப்பானது ஓடு பதிக்கப்பட்டிருத்தல் (2" x 2")
- சீலிங் இருத்தல் வேண்டும்
- மின் உற்பத்தி இயந்திரம் ஒன்றிற்கான கட்டடத்தின் பின்பக்கத்தில் முறையாக காற்றோட்டமுள்ள 100 சதுர அடி (10' x 10') அறை (மின் உற்பத்தி இயந்திரத்தை எடுத்துச் செல்வதற்காக தனியான பாதையொன்று இருத்தல் வேண்டும்)
- அங்கவீனர்களுக்கான சாய்வுப்பாதை
- 1000லீட்டர் நீரை கொள்ளக்கூடிய நீர் களஞ்சியப்படுத்தும் தாங்கியொன்று.
- கட்டடத்தின் பின்பக்கத்திலுள்ள கதவுகள் மற்றும் யன்னல்கள் பாதுகாப்பு கனரக இரும்பு தடுப்பினால் அமைந்திருத்தல் வேண்டும்.
- தீ காப்புறுதி பெறப்பட்டிருத்தல் வேண்டும்.

இது தொடர்பில் ஆர்வம் காட்டும் தரப்பினர், கட்டிட வரைபடப் பிரதி மற்றும் ஏனைய அனைத்து விபரங்களையும் பின்வரும் முகவரிக்கு 14 நாட்களுக்குள் கிடைக்கச் செய்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் ''மருதமுனை கிளைக்கான பொருத்தமான கட்டிடம்'' என தயவு செய்து குறிப்பிடவும்.

**உதவி பொது முகாமையாளர்,**
**(கிழக்கு மாகாணம்),**
**இலங்கை வங்கி,**
**கிழக்கு மாகாண அலுவலகம்,**
**இல.: 455, பிரதான வீதி,**
**திருகோணமலை.**

1975 BOC CALL CENTRE www.boc.lk A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்

தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.

இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

SUNDAY OBSERVER ADZ | வாரமஞ்சரி

**Promotional Rates for Classified Advertisements** (Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| Rs. 800/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,000/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,300/- |

**Gampaha District**

**Gampaha - 033 22 23 464**
1602 - A. L. T. L. Liyanarachchi - Hemas Bookshop, No. 12, Orutota Road, Gampaha.

**Wattala - 011 2 937 989**
1522 - K. Dharmadasa - Dasa Brothers, Supermarket Building, Hendala Junction, Wattala.

**Nilpanagoda - 077 8 627 321**
1570 - K. L. Somasiri - 233/5, Diyulapitiya Road, Nilpanagoda.

**Wattala - 011 2 932 511**
1589 - J. A. Ranil Virendra Anthony Rodrigo - 660/12, Mabola Wattala.

**Kochchikade - 031 22 78 359**
1606 - M. S. A. Chaminda Fernando - Vinoda Advertising, No. 119/A, Chilaw Road, Kochchikade.

**Batuwatta - 071 8 921 271**
1626 - H. D. George - Renuka Grocery, No. 118/1, Station Road, Batuwatta.

**Dunagaha - 077 3 517 752**
1637 - H. Guththila Sarathchandra - Nelligaha Niwasa, Dunagaha.

**Ja-Ela - 011 2 947 379**
1659 - K. Dharmadasa - Dasa Brothers, No. 73, Main Street, Ja-Ela.

**Negombo - 071 480 43 55**
1684 - J. A. Kulasinghe Perera - No. 152/C, Greens Road, Udara Newspaper Agent, Negombo.

**Katunayake - 077 4 115 998**
1920 - S. M. N. Dinesha Fernando - No. 350, Colombo Road, Katunayake.

**Kandana - 011 2 233 651**
1927 - Y. A. D. Rajapaksha - Jayabima Stores, No. 105, Station Road, Kandana.

**Minuwangoda - 011 2 297 881**
1935 - K. L. Somasiri - No. 233/5, Diulapitiya Road, Minuwangoda.

**Katana - 031 2 241 687**
1938 - W. N. D. Agosthinu Appuhami - No. 124/D, Kaluwarippuwa West, Katana.

**Ja-Ela - 071 8 571 713**
1943 - Gamini Arambawatta - No. 28, Old Negombo Road, Kanuwana, Ja-Ela.

**Kotugda - 011 2 290 815**
1944 - M. K. Melcolm Silva - 'Jayamal' Kasagahawatta, Kotugoda.

**Negombo - 071 552 22 40**
1944 - H. A. S. Pushpalatha Rosairo - Rosairo Newspapers and Advertising, Negombo.

**Udugampola - 071 4 554 696**
1470 - K. K. Danesh Pradeepa - 'Kumudu' Nilwala Road, Udugampola.

**Ganumulla - 076 2 217 181**
1969 - S. Damith Mellawa Thanthrige - Ganumulla

**Indigolla - 033 5 613 736**
1982 - M. M. Manjula Saman Kumari - 72/5/C/2, Yakkala Road, Indigolla.

**Kelaniya - 011 2 947 379**
1457 - G. Wimalasiri Perera - No. 555, Dhanushka Velandasela, Waragoda Road, Kelaniya.

**Malwana - 011 2 487 560**
1461 - G. Shamila Vithana - No. 549/5, 'Dilsha' Walgama, Malwana.

**Kadawatha - 011 2 902 092**
1434 - M. M. S. Damayanthi Herath - Adz soon Advertising, 137/1, Kandy Road, Kadawatha.

**Dompe - 071 7 186 955**
1498 - S. A. C. Senadheera - 'Jayanthi', Dompe.

**Kiribathgoda - 077 3 719 282**
1499 - P. A. Priyani Peliarachchi - New Samanala Book Shop, No. 181, Kandy Road, Kiribathgoda.

**Yakkala - 077 3 475 696**
1561 - W. Mudalige - Ruhunu Hardware Stores, No. 50 A, Kirindiwela Road, Yakkala.

**Kirindiwela - 077 2 047 350**
1607 - D. M. Sarath Premathilake - Chandana News Center, Radawana Road, Kirindiwela.

**Nittambuwa - 033 22 89 608**
1654 - W. P. K. R. S. Narangoda - Ganga Trade Center, No. 134, Kandy Road, Nittambuwa.

**Nittambuwa - 077 3 191 979**
1905 - L. T. R. S. Jayawardana - Jayawardena Book Shop, No. 643, Wathupitiwala, Nittambuwa.

**Giriulla - 077 9 542 492**
1906 - K. A. Jagath Chandrasiri - No. 45, Negombo Road, Giriulla.

**Kelaniya - 011 4 820 896**
1910 - P. D. Sumedha Samarajeewa - No. 340, Biyagama Road, Sinharamulla, Kelaniya.

**Makola - 078 5 200 648**
1940 - R. D. Chirantha Jayawardena - No. 365/5, Gunarathna Mawatha, Makola North, Makola.

**ADZ HOTLINE - 011 2 429 369**
**CALL - 011 2 429 342/ 343**

## 1964ஆம் ஆண்டின் 28ஆம் இல. காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தச் சட்டம் (460ஆவது அத்தியாயம்) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல

காணி அமைச்சின்
இலக்கம்: 4-3/16/2012/NRD/401
எனது இலக்கம்: BER/4/5/2/18

காணி எடுத்தல் சட்டப்படி அரசிற்கு சுவீகரிக்கப்பட்டுள்ள இங்கு கீழே காட்டப்பட்டுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணி ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதன் காரணமாக அரசு உரிமையை எடுத்துக் கொள்ள அரசாட்சியாளர் எண்ணி உள்ளார். அச்சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழ் உரிமை பரிசீலனை பேருவளை பிரதேச செயலகத்தில் என்னால் நடாத்தப்பட உள்ளதாக பொது மக்கள் அறிந்து கொள்வதற்காக இத்தால் அறியத்தருகிறேன். இக்காணி சம்பந்தமாக உரிமை உள்ளவர்கள் அப்பரிசீலனைக்காக முன் வர வேண்டும். மேலதிக விபரங்களுக்கு 2334/42 இலக்கமுடைய மற்றும் 2023.06.01 திகதியுடைய இலங்கை சனநாயக குடியரசின் அதி விஷேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பத்திரத்தைப் பாக்கவும்.

| | | |
|---|---|---|
| மாவட்டம் | - | களுத்துதுறை |
| பிரதேச செயலகப் பிரிவு | - | பேருளை |
| கிராம சேவகர் பிரிவு | - | 746 இந்திரிலிகொட |
| | - | 742 மக்கொண தெற்கு |
| கிராமம் | - | இந்திரிலிகொட |
| வரைபட இலக்கம் | - | மு.பி.க. 4841 |
| காணித்துண்டு | - | 14 |
| பிரமாணம் | - | ஹெக்டயார் 0.0893 |

**எம். ரன்ஜன் பி பெரேரா**
**பிரதேச செயலாளர்,**
**பேருவளை.**

**முகவரி: பிரதேச செயலகம், பேருவளை**
திகதி: 05.01.2024

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள் காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

**எனது இல.: DIVKB/LND/LA/DSKAQ/10**
**காணி அமைச்சின் இல.: 4-3/5/2019/HA/262**

கொபெய்கனே பிரதேச செயலகத்திற்காக கீழ்க்காணும் காணித் துண்டினை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை, 1964 ஆம் ஆண்டின் 28 இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460 ) 7ஆம் பிரிவின் (1)ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

வடமேல் மாகாணம், குருணாகல் மாவட்டம், கொபெய்கனே பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் - 1308 அரளுகஸ்வெவ கிராம உத்தியோகத்தர் பிரிவில், இஹல அரளுகஸ்வெவ கிராமத்தில் அமைந்துள்ள, சிரேஷ்ட நிலஅளவை அத்தியட்சகரினால் தயாரிக்கப்பட்ட 2023.12.13 ஆம் திகதியின் கடத்திரள் வரைபட இலக்கம் 420722ல் தொகுதி இலக்கம் 03, தாள் இலக்கம் 1ல் காணப்படும் பிரமாணம் ஹெக்டயார் 0.4846 ஆகிய கீழே விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு.

**துண்டு இலக்கம் 1**

காணியின் பெயர்: கஹட்டகஹமுலஹேன, கோண்கஹமுலஹேன: காணியின் விபரம் வீட்டுத்தோட்டம் உரிமை கோருவோர் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு, கொபெய்கனே பிரதேச செயலகத்திற்காக தேவைப்பட்டுள்ளது: விஸ்தீரணம்: 0.4846 ஹெக்டயார்.

மேற்குறித்த காணித் துண்டுக்கு உரித்துப் பேசுகின்ற அல்லது வேறு தொடர்புகள் உள்ள சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2024 ஏப்ரல் மாதம் 22 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு, கொபெய்கனே பிரதேச செயலகத்தில் என்முன் தோன்றும்படியும்,

மேலும் அக் காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணித் துண்டு எடுத்ததற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நட்டஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2024 ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**டப். திலிணி நிஸன்சலா சில்வா,**
**பிரதேச செயலாளர்,**
**கொபெய்கனே.**

**கொபெய்கனே பிரதேச செயலகத்தில்,**
**2024.01.09**

## அரச மற்றும் அரச கூட்டுத்தாபனங்களின் பதவிகளுக்கு பெயர் குறிப்பிடப்பட்ட/ நியமிக்கப்பட்ட ஆட்களின் தகுதி பற்றிய ஆராய்வதற்கான இலங்கைப் பாராளுமன்றத்தின் உயர் பதவிகள் பற்றிய குழு

இலங்கைப் பாராளுமன்றத்தின் உயர் பதவிகள் பற்றிய குழு பின்வரும் பதவிகள் தொடர்பாக பெயர் குறிப்பிடப்பட்ட ஆட்களின் தகுதிகளை ஆராயும்.

| | பெயரும் முகவரியும் | பதவி |
|---|---|---|
| 1 | திரு. ஓமர் லெப்பை அமீர் அஜ்வத்<br>4/1, ரஷ்டவர், இலக்கம்: 09, கவுன்சில் அவென்யூ. தெஹிவளை | சவூதி அரேபிய இராச்சியத்திற்கான இலங்கையின் தூதுவராகப் பெயர் குறிப்பிடப்பட்டவர் |
| 2 | திரு. மஜிந்த ஜோசப் பிரிய ஜயசிங்க<br>இலக்கம்: 41, ரஜமஹா விஹார வீதி, பிட்டகோட்டே | சீன மக்கள் குடியரசிற்கான இலங்கையின் தூதுவராகப் பெயர் குறிப்பிடப்பட்டவர் |

மேலே பெயர் குறிப்பிடப்பட்டவர்கள் தொடர்பில் எவரேனும் அல்லது எந்தவோர் அமைப்பும் கருத்துக்களைத் தெரிவிக்க விரும்பினால் முறையாகக் கையொப்பமிட்டு, 'செயலாளர், உயர் பதவிகள் பற்றிய குழு, குழுப் பணியகம், இலங்கைப் பாராளுமன்றம், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே என்ற விலாசத்திற்கு 2024 ஜனவரி மாதம் 28ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடிய வகையில் பதிவுத் தபாலில் இன்றேல் தொலைநகல் இல. 011-2777389 ஊடாக அல்லது highposts_c@parliament.lk எனும் மின்அஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

அவ்வெழுத்துமூல கருத்துக்களுக்கு மேலதிகமாக வாய்மூல கருத்துக்களையும் முன்வைக்குமாறு குழுவினால் பணிக்கப்படலாம். இந்த விளம்பர பாராளுமன்ற இணையதளத்திலும் இடம் பெற்றுள்ளது. (www.parliament.lk)

**குழுச் செயலாளர்,**
**பாராளுமன்றச் செயலாளர் நாயகம்.**

**இலங்கைப் பாராளுமன்றம்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே.**
2024 ஜனவரி 15ஆம் திகதி

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

Marriage Proposals in the Sunday Observer Is the best way to fulfil your Future Dreams

# தென்கிழக்கு பல்கலைக்கழக கல்வி நடவடிக்கைகள் மேலும் ஒத்திவைப்பு

*(கல்முனை மத்திய தினகரன் நிருபர் )*



தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் கல்வி நடவடிக்கைகள் மீண்டும் ஒத்திவவைக்கப்பட்டுள்ளது. இப் பல்கலைக்கழகத்தின் ஒலுவில் வளாகம் வெள்ளத்தில் மூழ்கியதால் கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் (16) ஒத்தி வைக்கப்பட்டிருந்தன. இந்நிலையில்,நிலைமைகள் இன்னும் சீரடையாததால் மீண்டும் (21) வரை கற்றல் நடவடிக் கைகள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

சீரற்ற காலநிலை, மழை, வெள்ளம் மற்றும் வான்கதவுகள் திறப்பு காரணமாக தென்கிழக்கு பல்கலைக்கழகத்தின் ஒலுவில் வளாகம் கடந்த இரண்டு நாட்களாக வெள்ள நீரில் மூழ்கியுள்ளது. அதேவேளை, சேத விபரங்கள் மதிப்பிடுவதற்கும் பல்கலைக்கழகத்தை விரைவாக சுத்தப்படுத்தி மீளவும் ஆரம்பிப்பதற்கும் உரிய அதிகாரிகளுக்கு ஆலோசனை வழிகாட்டலும் வழங்கப்பட்டுள் ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# கிழக்கு ஆளுநர் – IMF குழு சந்திப்பு கிழக்கின் சேவைகளுக்கும் பாராட்டு



இலங்கை வந்துள்ள சர்வதேச நாணய நிதியத்தின் குழுவினர் திருகோணமலையிலுள்ள ஆளுநர் செயலகத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானை சந்தித்து கலந்துரையாடினர்.

கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி திட்டங்கள், வேலைத் திட்டங்கள் குறித்து கலந்துரையாடியதுடன், கிழக்கு மாகாணம் குறுகிய காலத்தில் அடைந்து வரும் வளர்ச்சிக்கு பாராட்டுக்களையும் தெரிவித்தனர்.

இக்கலந்துரையாடலில் சிரேஸ்ட பணித் தலைவர் பீட்டர் ப்ரூயர் IMF வதிவிடப் பிரதிநிதி சர்வத் ஜஹான், சிரேஸ்ட பொருளாதார நிபுணர் சோபியா ஜாங், ஹுய் மியாவ் (சிரேஸ்ட நிதித்துறை நிபுணர்), ஹோடா செலிம் (சிரேஸ்ட பொருளாதார நிபுணர்), டிமிட்ரி ரோஸ்கோவ் (சிரேஸ்ட பொருளாதார நிபுணர்), சந்தேஸ் தூங்கானா (பொருளாதார நிபுணர்), மற்றும் மனவே அபேயவிக்கிரம (உள்ளூர் பொருளாதார நிபுணர்) ஆகியோர் கலந்து கொண்டனர்.

# "உழைப்பால் உயர்வோம்" என்ற சிந்தனையில் செயற்படுவோம்

**சிவ. சந்திரகாந்தன்.**

தமிழர்களின் பண்பாடுகளில் ஒன்றாக விளங்கும் தைப்பொங்கல் திருநாளைக் கொண்டாடும் அனைவரது வாழ்விலும் அன்பும், அமைதியும், நலமும்,வளமும் பெருக வாழ்த்துகின்றேன் என தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் தலைவரும் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமான சிவ .சந்திரகாந்தன் பொங்கல் வாழ்த்தில் தெரிவித்துள்ளார்.

எமது நாடு தற்போது பொருளாதார நெருக்கடியிலிருந்து ஓரளவுமீண்டெழ முயற்சிக்கும் தருணத்தில் இயற்கையின் சீற்றத்தால் ஏற்படும் பாதிப்புக்களும் ஆங்காங்கே நிகழ்ந்தவண்ணமே இருக்கின்றன. அந்தவகையில் தற்போது ஏற்பட்டுள்ள பருவகால மழைவீழ்ச்சி அதிகரிப்பினால் ஏற்பட்டிருக்கும் வெள்ளப்பெருக்குஎமது மக்களை அதிகம் பாதிக்கிறது துரதிஸ்டமே. இச்சூழலில் இயற்கை அன்னைக்கும் உலகத்தார் அனைவருக்கும் அச்சாணியாக விளங்கும் உழவர் பெருமக்களுக்கும் அவர்களுக்கு துணை புரியும் உயிரினங்களுக்கும் நன்றி கூறும் விதமாக கொண்டாடப்படும் இத்தைத்திருநாளில் நாம் அனைவரும் புதியதோர் நம்பிக்கையோடு பயணிக்க இந்நாளை துணை கொண்டு செயற்பட நாம் திட சங்கற்ப்பம் பூணவேண்டும்.

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்டோர் இடைத்தங்கல் முகாம்களில் தஞ்சம்

*(கல்முனை மத்திய தினகரன் நிருபர்)*

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை தங்க வைக்க சம்மாந்துறையில் இரண்டு முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

சம்மாந்துறை பிரதேச செயலக அனர்த்த முகாமைத்துவ குழுவின் ஒத்துழைப்போடு, மக்களை பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கும் ஏற்பாடுகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. நெய்னாகாடு கிராமத்தில் தற்பொழுது வரை சுமார் 19 குடும்பங்களில் உள்ள 77 உறுப்பினர்கள் சம்மாந்துறை தாறுஸ்ஸலாம் மகா வித்தியாலத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மல்வத்தை பிரதேச மக்கள், சம்மாந்துறை மல்வத்தை விபுலானந்த மகா வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் செய்துகொடுக்கப்பட்டுள்ளன.

சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம் ஹனிபா பாடசாலையில் அமைக்கப்பட்டுள்ள முகாம்களுக்கு நேரடியாகச் சென்று நிலைமைகளை பார்வையிட்டார்.மக்கள் தங்கியுள்ள முகாம்களுக்கு பாதுகாப்பு உள்ளிட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

# தென்கிழக்காசிய கணித போட்டியில் மாணவி சாதனை

*(கிண்ணியா தினகரன் நிருபர்)*

பொலன்னறுவை முஸ்லிம் தேசிய பாடசாலையில் தரம் 6 இல் கல்வி பயிலும் மாணவி மொஹமட் நபீல் இல்மா ஸைனப், 2023 இல் இடம்பெற்ற தென்கிழக்காசிய கணித ஒலிம்பியாட் போட்டியில் அகில இலங்கை ரீதியாக முதலிடம் பெற்று தங்கப் பதக்கத்தை வென்றுள்ளார்.

அதேவேளை, சிங்கப்பூரில் நடைபெறும் போட்டியிலும் இலங்கை சார்பாக இம்மாணவி கலந்து கொள்ளவுள்ளார். இப்போட்டி எதிர்வரும் (20) நடைபெறவுள்ளது.

கணித ஆசான் கே,எல்,எம், நபீல் மற்றும் ஆசிரியை வை,எல்,எப், சுக்றியா ஆகியோரின் மூத்த புதல்வியான இம்மாணவி, பொலன்னறுவை முஸ்லிம் தேசிய பாடசாலையிலிருந்து சர்வதேச கணித ஒலிம்பியாட் போட்டிக்கு செல்லும் முதல் மாணவி என்பதும் குறிப்பிடத்தக்கது.




சூரியக்கதிரின் உதவியோடு
நெற்கதிரை புதுப்பானையில் பொங்க வைக்க உதவிடும்
அனைத்து இணைப்புகளோடு
SLT-MOBITEL உம் இணைகின்றது.

இனிய தைத் திருநாள் வாழ்த்துகள்!

SLTMOBITEL
நிகரற்ற இணைப்பு

# சிறு விளம்பரம்

## மோட்டார் வாகனங்கள்

### 106 கார்கள் விற்பனைக்கு

NW JA-2417 HYUNDAI SONATA CAR அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 002918

WP KH-1483 CHERRY QQ CAR அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 002925

### 107 டொயோட்டா கார்கள் விற்பனைக்கு

644331 TOYOTA COROLLA WAGON அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 002912

### 110 மாருதி கார்கள் விற்பனைக்கு

CP KH-9395 MARUTI SUZUKI CAR அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 002908

### 117 வேன்கள் விற்பனைக்கு

2505292 MAZDA BONGO BROWNY VAN அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 002915

### 119 பஸ்கள், லொறிகள் விற்பனைக்கு

EP LJ-1271 TATA 1615 DUMP TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 002905

NP LO-3373 TATA LPK1615 DUMP TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 002917

SP LC-2925 TATA ACE TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 002950

WP DAB-4929 MAHINDRA MAXXIMO TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 002922

WP LP-0833 JMC N700-HALF BODY TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 002926

WP NC-9519 LANKA ASHOK LEYLAND VIKING BUS அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 002947

2269063 MITSUBISHI FUSO FIGHTER DUMP TRUCK அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 002914

### 122 மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

NC YX-7238 BAJAJ THREE WHEELER அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 002916

SP BGE-9754 YAMAHA FZ MOTOR CYCLE அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 002919

WP AAE-7648 BAJAJ THREE WHEELER அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 002952

WP ABL-8704 TVS KING THREE WHEELER அதியுயர் விலைக்குண்டு. செங்கடகல பினான்ஸ் பிஎல்சி, கண்டி. 077010 7270, 077478 9216. திங்கட்கிழமையிலிருந்து வெள்ளிக்கிழமை வரை மாத்திரம் அழைக்கவும். 002921

Repeat Your ad For Better Offers

## காணி/தோட்டம்

### 617 வீடு சொத்து கம்பஹா மாவட்டம் விற்பனைக்கு

வத்தளை, கல்யாணி மாவத்தையில் தமிழர் செறிந்து வாழும் பகுதியில் 3 அறைகளை கொண்ட 7.05 பேர்ச்சில் அமைந்துள்ள வீடு உடனடி விற்பனைக்கு உள்ளது. 145 இலட்சம். விலை பேசி தீர்மானிக்கலாம். தொடர்பு 0772300011 003326

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

The largest Job Market in Sri Lanka
www.observerjobs.lk
Your dream job awaits you...
Newspaper
Web
Social media
Networking
Headhunting
At your fingertips
Widest reach for your employment advertisement
Email : info@observerjobs.lk Hotline: 1949
For more information
0777270012 / 0112429314

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## உள்ளூராட்சித் திணைக்களம், ஊவா மாகாணம்

## உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டம்

1. இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டத்தின் செலவுக்கு உலக வங்கியிடமிருந்து கடனைப் பெற்றுள்ளது, மேலும் இதன் ஒரு பகுதியை அட்டவணையில் காட்டப்பட்டுள்ள செயற்றிட்டங்களுக்கு செலுத்துவதற்குப் பயன்படுத்த விரும்புகிறது.
2. திணைக்கள பெறுகைக் குழுவின் தலைவர் இயைபுடைய உள்ளூராட்சி நிறுவனங்களின் (ஊவா மாகாணம்) சார்பில் பின்வரும் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம், வேலைகளுக்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
3. விலைக்கோரல்கள் ‘‘1987 ஆம் ஆண்டின் பொது ஒப்பந்தச் சட்டம் எண் 03” இன் விதிகளால் நிர்வகிக்கப்படுகிறது. ஆகையால், மொத்த மதிப்பு ஐந்து மில்லியன் ரூபாவை விஞ்சினால் மட்டும் (இல. ரூபா 5,000,000.00) இலங்கையின் பொது ஒப்பந்தங்களின் பதிவாளரால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் பதிவுச் சான்றிதழை (FORM PCA 03) விலைமனுதாரர் அந்தச் சட்டத்தின் 11வது பிரிவின் பிரகாரம் விலைமனுக்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும். (http://www.drc.gov.lk/)
4. விலைக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் ஊடாக மேற்கொள்ளப்படும்.
5. ஒப்பந்தத்தைக் கையளிக்கத் தகுதி பெறுவதற்கு வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்திற்கு இயைபுடைய துறையில் நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகார சபையில் (CIDA) பதிவு செய்து கொண்டிருத்தல் வேண்டும்.
6. தகுதித் தேவைப்பாடுகள் விலைமனு ஆவணத்தின் 4ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளன. மேலதிக விவரங்கள் விலைமனு ஆவணத்தின் அட்டவணையின் 5ஆம் பிரிவில் (விலைக்கோரல் தரவு / ஒப்பந்த தரவு) வழங்கப்பட்டுள்ளன.
7. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை அட்டவணையில் பட்டியலிடப்பட்ட அந்தந்த உள்ளூராட்சி நிறுவனங்களின் தலைவர் / செயலாளர் அவர்களிடமிருந்து வாரநாட்களில் 9.00 மணித்தியாலம் முதல் 15.00 மணித்தியாலம் வரை பெற்றுக்கொள்ளலாம்.
8. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் அந்தந்த உள்ளூராட்சி நிறுவனங்களில் அல்லது ஊவா - உள்ளூராட்சித் திணைக்களத்திற்கு 2024-01-15ஆம் திகதி முதல் 2024-02-04ஆம் திகதி வரை 9.00 மணித்தியாலம் முதல் 15.00 மணித்தியாலம் வரை மீளளிக்கப்படாத 7500.00 கட்டணத்தைச் செலுத்தி ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கட்டணங்களை ரொக்கப் பணமாகவே செலுத்துதல் வேண்டும்.
9. 2024-02-05ஆம் திகதி 10.00 மணித்தியாலம் அல்லது அதற்கு முன்பதாக உள்ளூராட்சித் திணைக்களம் - ஊவா, மார்டின் சில்வா மாவத்தை, பதுளை எனும் முகவரிக்கு ஒப்படைத்தல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகம்தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.
10. பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள தகவல்களின் பிரகாரம் சகல விலைமனுக்களுடன் விலைமனுப்பிணை இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
11. 2024-01-23ஆம் திகதி 10.00 மணித்தியாலத்தில் பதுளை, மார்டின் சில்வா மாவத்தை, ஊவா - உள்ளூராட்சித் திணைக்களத்தில் விலைக்கோரலுக்கு முன்னரான கூட்டம் இடம்பெறும். ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் தங்கள் சொந்த செலவில் இந்த கூட்டத்தில் பங்கேற்கலாம்.

| உள்ளூராட்சி நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்த இல. | வேலை விபரங்கள் | மதிப்பீட்டுக் கிரயச் செலவு (இல.ரூ. மில்லியன்) | ஒப்பந்தக் காலம் | தேவையான தரம் | விலைக்கோரல் பிணைத் தொகை (ரூபா) | விலைக்கோரல் பிணை முறியின் செல்லுபடிக் காலம் | விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும் இடம் மற்றும் தொ.பே. இலக்கம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| மெதகம பிரதேச சபை | LDSP/UP/MO/MGPS/W/2024/1 | மெதகம வாரச் சந்தையை மேம்படுத்துதல் | 8.495 | 90 நாட்கள் | C8, C7 மற்றும் C6 கட்டிடங்கள் | 85,000.00 | 29.04.2024 | உள்ளூராட்சித் திணைக்களம் - ஊவா, மார்டின் சில்வா மாவத்தை, பதுளை. 0552222407 அல்லது இயைபுடைய உள்ளூராட்சி நிறுவனம் |
| புத்தள பிரதேச சபை | LDSP/UP/MO/BUPS/W/2024/1 | புஹுல்கொட்டுவயில் உள்ள முன்பள்ளிக் கட்டிட புதுப்பித்தல் நிர்மாண மிகுதி வேலைகள் | 3.33 | 90 நாட்கள் | C9, C8 மற்றும் C7 கட்டிடங்கள் | 34,000.00 | 15.04.2024 | |
| கதிர்காமம் பிரதேச சபை | LDSP/UP/MO/KPS/W/2024/1 | மத்துமபண்டார பார்வையாளர் கூடத்தின் மிகுதி வேலைகளைத் தொடர்தல் - PT 1 மிகுதி பூர்த்தியாக்கல் வேலைகள் | 2.069 | 90 நாட்கள் | C9, C8 மற்றும் C7 கட்டிடங்கள் | 21,000.00 | 15.04.2024 | |
| மொனராகல பிரதேச சபை | LDSP/UP/MO/MOPS/W/2024/1 | மொனராகலை பிரதேச சபை முன்பள்ளியில் உள்ள பகல்நேர காப்பகத் திட்டத்திற்கான தொடர்ச்சியான மிகுதி வேலைகள் PT 1 மிகுதி பூர்த்தியாக்கல் வேலைகள் | 14.673 | 120 நாட்கள் | C7, C6 மற்றும் C5 கட்டிடங்கள் | 147,000.00 | 29.04.2024 | |
| படல்கும்புர பிரதேச சபை | LDSP/UP/MO/BKPS/W/2024/1 | படல்கும்புர வாரச்சந்தை பலநோக்கு கட்டிடத்தில் 01ஆம் மாடியை நிர்மாணித்தல் - மிகுதி BT 2/3 வேலைகளை பூர்த்தியாக்கல் மற்றும் வாரச்சந்தை பலநோக்குக் கட்டிடத்தின் தரை மாடியில் மிகுதியாகவுள்ள வேலைகளை பூர்த்தி செய்தல் | 17.599 | 180 நாட்கள் | C7, C6 மற்றும் C5 கட்டிடங்கள் | 176,000.00 | 29.04.2024 | |
| மடுல்ல பிரதேச சபை | LDSP/UP/MO/MDPS/W/2024/1 | மரிஆர பலநோக்கு நிலையத்துடன் உள்ள வாரச்சந்தையை மேம்படுத்துதல் (2ஆம் படிநிலை) BT2,/3 பூர்த்தியாக்கல் வேலைகள் | 12.748 | 120 நாட்கள் | C7, C6 மற்றும் C5 கட்டிடங்கள் | 128,000.00 | 29.04.2024 | |
| பிபில பிரதேச சபை | LDSP/UP/MO/BBPS/W/2024/1 | பிபில பலநோக்கு நிலையத்துடன் உள்ள வாரச் சந்தையின் மிகுதி பூர்த்தியாக்கல் வேலைகள் (BT 2/3) (2ஆம் படிநிலை) | 38.264 | 180 நாட்கள் | C6, C5 மற்றும் C4 கட்டிடங்கள் | 383,000.00 | 10.06.2024 | |
| வெள்ளவாய பிரதேச சபை | LDSP/UP/MO/WPS/W/2024/1 | வெள்ள்வாய பலநோக்கு நிலையத்துடன் உள்ள வாரச்சந்தையை மேம்படுத்துதல் (2ஆம் மாடி கூரை) வெள்ளவாய பலநோக்கு நிலையத்துடன் உள்ள வாரச்சந்தையை பூர்த்திசெய்தல் மற்றும் BT2/3 பூர்த்தியாக்கல் வேலைகள் (2ஆம் படிநிலை) PT 1 மிகுதி பூர்த்தியாக்கல் வேலைகள் | 40.283 | 180 நாட்கள் | C6, C5 மற்றும் C4 கட்டிடங்கள் | 403,000.00 | 10.06.2024 | |
| ரிதிமாலியத்த பிரதேச சபை | LDSP/UP/BD/RDPS/W/2024/1 | ஆந்தாஉல்பத்தயிலுள்ள வர்த்தக நிலையத்திற்கான தொடர்ச்சியான மிகுதி வேலைகள் | 12.71 | 180 நாட்கள் | C7, C6 மற்றும் C5 கட்டிடங்கள் | 127,000.00 | 29.04.2024 | |
| வெலிமட பிரதேச சபை | LDSP/UP/BD/WPS/W/2024/1 | கெப்பெட்டிபொல, சந்தை நிலையம் மற்றும் வாரச்சந்தையின் இரண்டாம் கட்ட நிர்மாணம் - விற்பனைக் கூடங்களை நிர்மாணித்தல் - BT 2/3 பூர்த்தியாக்கல் மிகுதி வேலைகள் | 50.663 | 180 நாட்கள் | C6, C5 மற்றும் C4 கட்டிடங்கள் | 507,000.00 | 10.06.2024 | |
| பதுளை மாநகர சபை | LDSP/UP/BD/MCBD/W/2024/1 | பதுளை ஹுணுக்கொட்டுவ வீதி, நாள் சந்தை மற்றும் சந்தைக் கட்டிடத்தின் மிகுதி நிர்மாண வேலைகள் | 17.056 | 180 நாட்கள் | C7, C6 மற்றும் C5 கட்டிடங்கள் | 171,000.00 | 29.04.2024 | |
| ஹப்புத்தளை பிரதேச சபை | LDSP/UP/BD/HPS/W/2024/1 | ஹப்புத்தளை பிரதேச சபை பலநோக்குக் கட்டிடத்தின் முதலாம் மாடி மற்றும் (BT 2/3) மிகுதி பூர்த்தியாக்கல் வேலைகள் | 9.321 | 120 நாட்கள் | C8, C7 மற்றும் C6 கட்டிடங்கள் | 94,000.00 | 29.04.2024 | |
| ஊவா பரணகம பிரதேச சபை | LDSP/UP/BD/UPPS/W/2024/1 | லூணுவத்த சந்தை நிலையத்தின் BT 2/3 மிகுதி நிர்மாண வேலைகள் (முதலாம் மாடி) | 16.199 | 180 நாட்கள் | C7, C6 மற்றும் C5 கட்டிடங்கள் | 162,000.00 | 29.04.2024 | |

**பிரதி செயற்றிட்டப் பணிப்பாளர்,**
**உள்ளூர் அபிவிருத்தி உதவித் திட்டம் (LDSP),**
**செயற்றிட்ட அமுலாக்கல் அலகு,**
**உள்ளூராட்சித் திணைக்களம், ஊவா மாகாணம்.**
**0552222407**
2024-01-15.

Wherever you are..,
The best way to Fulfil your Future Dreams...
Gather with.

SUNDAY OBSERVER Marriage Proposals Decades of Trusted Service
Green Light for Online Transfer BOC Lake House Branch Acc. No. 000000377
E-mail - classified@lakehouse.lk
077 7 270 067
077 7 278 948/ 011 2 429 347
011 2 429 383 I 011 2 429 342/ 343

Best way to fulfil your Future Dreams
Marriage Proposals
in the
Sunday Observer

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

# பாகிஸ்தானை மீண்டும் வீழ்த்தியது நியூசிலாந்து



பாகிஸ்தானுக்கு எதிரான இரண்டாவது டி20 போட்டியிலும் 21 ஓட்டங்களால் வெற்றியீட்டிய நியூசிலாந்து அணி ஐந்து போட்டிகளைக் கொண்ட தொடரில் 2–0 என முன்னிலை பெற்றது.

ஹமில்டனில் நேற்று (14) நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட நியூசிலாந்து அணி 20 ஓவர்களுக்கும் 8 விக்கெட்டுகளை இழந்து 194 ஓட்டங்களை பெற்றது. ஆரம்ப வீரர் பின் அலன் 41 பந்துகளில் 7 பௌண்டரிகள் மற்றும் 5 சிக்ஸர்களுடன் 74 ஓட்டங்களை விளாசினார்.

அணித் தலைவர் கேன் வில்லியம்ஸன் 26 ஓட்டங்களை பெற்றிருந்தபோதும் காயத்துக்கு உள்ளாகி ஆட்டத்தை பாதியில் நிறுத்திக் கொண்டார்.

இந்நிலையில் பதிலெடுத்தாட களமிறங்கிய பாகிஸ்தான் அணிக்கு பாபர் அஸாம் (66) மற்றும் பகார் சமான் (55) 3ஆவது விக்கெட்டுக்கு 87 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பெற்று நம்பிக்கை தந்தபோதும் அந்த அணி 19.3 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் பறிகொடுத்தது.

இதன்போது 7 ஓட்டங்களை பெற்ற மொஹமட் ரிஸ்வான் ஒரு சிக்ஸரை விளாசி பாக். அணிக்காக அதிக டி20 சிக்ஸார்கள் பெற்ற மொஹமட் ஹபீஸின் சாதனையை முறியடித்தார். ரிஸ்வான் மொத்தமாக 77 சிக்ஸர்களை பெற்றுள்ளார்.

# பிரதான கழக தொடரின் இறுதியில் செபஸ்டியன்



பதுரலிய விளையாட்டுக் கழகத்தை 10 விக்கெட்டுகளால் வீழ்த்திய செபஸ்டியன் விளையாட்டுக் கழகம் பிரதான கழகங்களுக்கு இடையிலான மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் தொடரின் இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது. கொழும்பு, என்.சி.சி. மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அரையிறுதிப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய பதுரலிய அணி 42.2 ஓவர்களில் 108 ஓட்டங்களுக்கு சுருண்டது. சரித் ராஜபக்ஷ, தரிந்து ரத்னாயக்க மற்றும் இசித்த விஜேசூரிய தலா 2 விக்கெட்டுகளை பதம்பார்த்தனர். பதுரலிய அணி சார்பில் அதிகபட்சமாக ரெஹான் சஞ்சய 50 பந்துகளில் 3 பௌண்டரிகளுடன் 27 ஓட்டங்களை பெற்றார்.

இலகுவான இலக்கை நோக்கி பதிலெடுத்தாடிய செபஸ்டியன் அணி ஒரு விக்கெட்டை கூட பறிகொடுக்காமல் 22.3 ஓவர்களில் 112 ஓட்டங்களை பெற்று வெற்றியீட்டியது. ஆரம்ப வீரர்களான துலின தில்ஷான் மற்றும் நவிது விதானகே இருவரும் ஆட்டமிழக்காது தலா 53 ஓட்டங்களை பெற்றனர்.

இலங்கை கிரிக்கெட் சபையினால் நடத்தப்படும் பிரதான கழகங்களுக்கு இடையிலான இந்தத் தொடரின் இறுதிப் போட்டி நாளை கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத்தில் நடைபெறவுள்ளது.

### இஸ்ரேல் படைக்கு ஆதரவு:

# தென்னாபிரிக்க இளையோர் அணியின் தலைவர் நீக்கம்



காசா போரில் இஸ்ரேலிய படையினருக்கு ஆதரவாக கருத்து வெளியிட்ட தென்னாபிரிக்க 19 வயதுக்கு உட்பட்ட அணியின் தலைவர் டேவிட் டீகர் பாதுகாப்பை காரணம் காட்டி தலைமை பொறுப்பில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

எனினும் இது யூத எதிர்ப்பு செயல் என யூதத் தலைவர்கள் குறிப்பிட்டுள்ளனர். யூதரான டீகர் கடந்த ஒக்டோபரில் இஸ்ரேலிய படையினரை பாராட்டி வெளியிட்ட கருத்து கடும் விமர்சனத்திற்கு உள்ளானது.

இந்நிலையில் எதிர்வரும் 19ஆம் திகதி தென்னாபிரிக்காவில் ஆரம்பமாகவுள்ள 19 வயதுக்கு உட்பட்டோருக்கான உலகக் கிண்ணத்தில் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் வன்முறைகள் வெடிக்கும் அச்சுறுத்தல் காரணமாகவே டீகர் நீக்கப்பட்டார் என்று தென்னாபிரிக்க கிரிக்கெட் சபை குறிப்பிட்டுள்ளது.

அனைத்து தரப்புகளின் நலனை கருதியே டீகர் தலைமை பொறுப்பில் இருந்து நீக்கப்பட்டார் என்று அது கூறியது. எனினும் அவர் தொடர்ந்தும் தென்னாபிரிக்க இளையோர் அணியில் இடம்பெற்றிருப்பதோடு புதிய அணித் தலைவர் இன்னும் அறிவிக்கப்படவில்லை.

முன்னதாக டீகர் வெளியிட்ட கருத்தை அடுத்து பலஸ்தீன ஒருமைப்பாட்டுக்கான கூட்டணி தென்னாபிரிக்க கிரிக்கெட் சபையிடம் முறைப்பாடு செய்ததை அடுத்து விசாரணைகள் நடத்தப்பட்டு அவர் எந்தத் தவறும் செய்யவில்லை என்று அறிவிக்கப்பட்டது.

இஸ்ரேல் மீது சர்வதேச நீதிமன்றத்தில் இனப்படுகொலை வழக்கை தொடுத்த தென்னாபிரிக்காவுக்கும் இஸ்ரேலுக்கும் இடையிலான உறவு காசா போரை அடுத்து விரிசல் அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் பெப்ரவரி 11ஆம் திகதி வரை நடைபெறவுள்ள 19 வயதுக்கு உட்பட்ட உலகக் கிண்ணப் போட்டியில் தென்னாபிரிக்க இளையோர் அணி வரும் வெள்ளிக்கிழமை மேற்கிந்திய தீவுகளை எதிர்கொள்ளவுள்ளது.

## சர்வதேச செய்திகள்

# 100 நாட்களை தொட்டு காசாவில் தொடர்ந்து தாக்குதல்: 'நிறுத்துவதில்லை' எனவும் உறுதி



காசாவில் போர் வெடித்து நேற்றுடன் 100 ஆவது நாளைத் தொட்ட நிலையில், இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடர்ந்து நீடிப்பதோடு யாராலும் எம்மை நிறுத்த முடியாது என்று இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு சூளுரைத்துள்ளார்.

இந்தப் போர் பாரிய மனிதாபிமான நெருக்கடியை ஏற்படுத்தி இருப்பதோடு, காசாவில் உயிரிழப்பு 24,000 ஐ நெருங்க, அந்த குறுகிய நிலத்தின் பெரும் பகுதி இஸ்ரேலிய குண்டு மழையால் சின்னாபின்னமாகியுள்ளது. இந்தப் போர் பிராந்தியம் எங்கும் பரவும் அச்சுறுத்தல் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

இஸ்ரேலுக்கு எதிரான இனப்படுகொலை குற்றச்சாட்டு மீதான வழக்கு விசாரணை ஹேகில் உள்ள சர்வதேச நிதிமன்றத்தில் இடம்பெறும் நிலையில், “எந்த ஒரு நீதிமன்றம் அல்லது இராணுவ எதிரிகளாலும் ஹமாஸை ஒழிக்கும் இஸ்ரேலின் இலக்கை நிறுத்த முடியாது” என்று நெதன்யாகு குறிப்பிட்டுள்ளார்.

“யாராலும் எம்மை நிறுத்த முடியாது ஹோகாலும், தீய எதிரிகளாலும் மற்றும் வேறு எவராலும் எம்மை நிறுத்த முடியாது” என்று சனிக்கிழமை தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்ட செய்தியாளர் சந்திப்பில் நெதன்யாகு குறிப்பிட்டார். “வெற்றிவரை தொடர்வதற்கு சாத்தியம் இருப்பதோடு அவசியமாக உள்ளது. அதனை செய்வோம்” என்றும் அவர் குறிப்பிட்டார்.

எனினும் மூன்று மாதங்களைத் தாண்டி நீடிக்கும் இந்தப் போர் நெதன்யாகுவுக்கு இஸ்ரேலுக்குள் பெரும் அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக பலஸ்தீன போராளிகளின் பிடியில் தொடர்ந்தும் இருக்கும் பணயக்கைதிகளை விடுவிக்க முடியாமல் போயிருப்பது அவர் மீதான எதிர்ப்பை அதிகரிக்கச் செய்துள்ளது. பணயக்கைதிகளை விடுவிக்கக் கோரி டெல் அவிவில் இடம்பெற்ற பேரணியில் ஆயிரக்கணக்கானவர்கள் பங்கேற்றனர்.

“பணயக்கைதிகள் விடுவிக்கப்படும் வரை நாம் ஒவ்வொரு வாரமும் இங்கு தொடர்ந்து வருவோம்’ என்று பேரணியில் பங்கேற்ற 47 வயது எடன் பெகரானோ ஏ.எப்.பி செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்தார்.

இந்தப் போர் வெடிப்பதற்கு காரணமான கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதிய இஸ்ரேல் மீதான பலஸ்தீன போராளிகளின் தாக்குதலில் சுமார் 1,140 பேர் கொல்லப்பட்ட நிலையில், சுமார் 250 பேர் பணயக்கைதிகளாக பிடிக்கப்பட்டனர். இதில் தொடர்ந்தும் 132 பேர் காசாவில் பணயக்கைதிகளாக இருப்பதாக நம்பப்படுகிறது. எனினும் அவர்களில் குறைந்தது 25 பேர் போருக்கு மத்தியில் கொல்லப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

**பசியுடன் இறந்த சிறுமி**

இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதல்களில் கடந்த 24 மணி நேரத்தில் மேலும் 135 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக காசா சுகாதார அமைச்சு நேற்று கூறியது. இவ்வாறு கொல்லப்பட்டவர்களில் ரபா நகரில் இடம்பெயர்ந்த இரு குடும்பங்கள் தங்கி இருந்த வீடு ஒன்றின் மீது இடம்பெற்ற ஏவுகணை வீச்சில் பலியான பத்து பேரும் அடங்குவர்.

போர் உக்கிரமாக நீடித்து வரும் சூழலில் பெரும் எண்ணிக்கையான மக்கள் காசாவின் எகிப்து எல்லையை ஒட்டிய ரபா நகரில் அடைக்கலம் பெற்று வருவதால் அந்தப் பகுதி அதிக சனநெரிசல் மிக்க இடமாக மாறியுள்ளது.

தான் மற்றும் தனது மனைவி வெளியே சென்றிருந்த வேளையில் இஸ்ரேலிய குண்டு வீச்சினால் தனது வீடு முழுமையாக தரைமட்டமாக்கப்பட்டுள்ளது என்று ரபா குடியிருப்பாளரான சமிர் கெஷ்டா ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

“இந்த வீட்டில் நான் மற்றும் எனது குழந்தைகள் அடைக்கலம் பெற்றிருந்தோம். நாம் அமைதியானவர்கள் முன்னெச்சரிக்கை இன்றி அவர்கள் எம்மை தாக்கினார்கள்” என்று அவர் கூறினார்.

தாக்குதல் இடம்பெறும்போது நிம்மா அல் அக்ஸார் என்பவர் வீட்டில் இருந்தார். “அந்தத் தாக்குதல் கற்பனை செய்ய முடியாதது. நாம் கூச்சலிட ஆரம்பித்தோம். என்னை தூக்குப் படுக்கையில் சிலர் சுமக்கும் வரை என்னால் நகர முடியாமல் இருந்தது” என்று அந்தப் பெண் குறிப்பிட்டார்.

இதில் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது வெள்ளிக்கிழமை இரவு வீட்டின் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக பசம் அரபா என்பவர் குறிப்பிட்டுள்ளார். ரொட்டித் துண்டை கையில் வைத்தபடி இறந்த சிறுமியின் புகைப்படத்தை காண்பித்தபடியே அவர் ஏ.எப்.சி. செய்தி நிறுவத்திற்கு இதனைத் தெரிவித்தார்.

“இந்தக் குழந்தை ஒன்றும் இல்லாமல் ரொட்டித் துண்டை சாப்பிட்டுக்கொண்டிருக்கும்போது பசியில் இறந்தது. எப்படி குழந்தைகள் இறக்கிறார்கள் என்பதை பார்க்க சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் எங்கே?” என்று அவர் குறிப்பிட்டார். இந்நிலையில் காசாவில் இதுவரை கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 23,843 ஆக அதிகரித்திருப்பதோடு மேலும் 60,317 பேர் காயமடைந்துள்ளனர். இடிபாடுகளில் புதையுண்டு அல்லது கொல்லப்பட்டிருப்பதாக நம்பப்படும் மேலும் 7,000 பேர் காணாமல்போயுள்ளனர்.

ஒட்டுமொத்தமாக காசா மக்கள் தொகையில் நான்கு வீதமானவர்கள் கொல்லப்பட்டு, காயமடைந்து அல்லது காணாமல்போயுள்ளனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் சிறுவர்கள் மற்றும் பெண்களாவர்.

காசா பேரை ஒட்டி ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையிலும் வன்முறை அதிகரித்துள்ளது. ஆயுதங்களுடன் யூத குடியேற்றம் ஒன்றுக்குள் ஊடுருவிய மூன்று பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டதாக இஸ்ரேல் இராணுவம் சனிக்கிழமை கூறியது. இதில் 15, 17 மற்றும் 19 வயதுடையவர்களே கொல்லப்பட்டிருப்பதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு கூறியது. பலஸ்தீன நகரான ஹெப்ரேனுக்கு அருகில் இருக்கும் அதோரா குடியேற்றத்தில் வெளிப்புற வேலியை உடைத்துக் கொண்டு ஊடுருவிய தாக்குதல்தாரிகளுடன் ஏற்பட்ட துப்பாக்கிச் சண்டையில் ஒரு இஸ்ரேலிய வீரர் காயமடைந்ததாக இஸ்ரேல் கூறியது.

மேற்குக் கரையில் இஸ்ரேல் இராணுவம் தொடர்ந்து நடத்திவரும் சுற்றிவளைப்புகள் மற்றும் அங்குள்ள குடியேற்றவாசிகளின் தாக்குதல்களில் நூற்றுக்கணக்கான பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டிருப்பதோடு மேலும் ஆயிரக்கணக்கானவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.



# இலங்கை முஸ்லிம்களின் கல்வி மறுமலர்ச்சியின் ஓர் அச்சாணி மர்ஹூம் கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி

## தென்மாகாண ராபிததுன் நழீமிய்யீன்களினால் நடத்தப்படும் கலாநிதி சுக்ரி நினைவேந்தல் நிகழ்வு மற்றும் நூல் அறிமுக விழா இன்று மாத்தறையில்



### பிறப்பும் கல்வி வாழ்வும்

மாத்தறை நகரில் 1940 ஜூன் 24இல் பிறந்தார். 15 வயது கூட பூர்த்தியாகாத நிலையில் மாணவர் சுக்ரி எழுத்துலகிற்குப் பிரவேசிக்கின்றார். இவரது ஆக்கங்கள் தினகரன் பத்திரிகையில் "எங்கள் கழகம்" "சிறுவர் அரங்கம்" போன்ற பக்கங்களில் ஆரம்பமாக வெளிவருகின்றன. மர்ஹூம் எம்.எஸ். எம். ஹரீஸ் ஆசிரியர் அல்ஹம்ராவில் சிறந்த வழிகாட்டியாக இருந்தார். காலி முஸ்லிம் கலாசார சங்கம் நடாத்தி வந்த அகில இலங்கை மீலாத் பேச்சுப் போட்டியில் பங்குகொண்டு முதலாமிடத்தை பெற்றுக்கொள்ளவும் வழிகாட்டியாக இருந்துள்ளார். "இணை



யற்ற இஸ்லாமிய யுத்த தர்மம்" எனும் சுக்ரி அவர்களின் முதலாவது வானொலி நிகழ்ச்சியாக நாடகம் இடம்பெற்றது. தமிழ் நாட்டில் இருந்து வெளிவரும் மணிவிளக்கு சஞ்சிகையின் ஆசிரியராக இருந்த அ.க. அப்துஸ் ஸமத் இலங்கை வந்த போது அவருக்கான வரவேற்பு வைபவத்தில் வரவேற்புரை நிகழ்த்துவதற்காக ஹரீஸ் அவர்களே அழைத்துச் சென்றனர். இவரை வழிநடாத்துவதில் ஸாஹிரா அதிபர் அறிஞர் ஏ.எம்.ஏ அஸீஸ் அவர்களின் பங்களிப்பும் முக்கியம் வாய்ந்தது. இங்கு அல்லாமா இக்பால் அவர்களின் சிந்தனைகளால் ஈர்க்கப்பட்டதால் இவ்வாழ்வு உதவியது.

பல்கலைக் கழக வாழ்வில் இலக்கியத் துறையில் தன்னை வளர்த்துக் கொள்ள பேராசிரியர் கைலாசபதி அவர்களின் வழிகாட்டல் பெரிதும் உதவியது. இவர் இக்காலத்திலேயே இலக்கியம் தொடர்பாகவும் ஈடுபாடு காட்டினார். இவர் எழுதிய இலக்கிய ஆக்கங்களுள் மூன்று சிறுகதைகளையும் இயற்றினார். இவர் எழுதிய முதலாவது சிறுகதை "தலாக்" என்பதாகும். இதனை இவர் பல்கலைக் கழகம் செல்ல முன்னர் எழுதினார். இதனை கொழும்பு முஸ்லிம் எழுத்தாளர் சங்கம் 1958இல் சிறுகதைத் தொகுப்பில் வெளியிட்டது. இவர் பல்கலைக்கழகத்தில் பட்டதாரி மாணவராக இருந்தபோது "வாரிசு" "கழுவாய்" ஆகிய இரு சிறுகதைகளையும் வெளியிட்டார். 24.01.1973இல் ஐக்கிய இராச்சியத்தில் உள்ள எடின்பரோ பல்கலைக்கழகத்திற்குச் சென்று கலாநிதிப் பட்டப்பின்படிப்பைப் பூர்த்தி செய்தார்.

### ஆய்வுப்பணிகளில் இலங்கை முஸ்லிம்களின் வரலாறு எனும் நூல்

பேருவல ஜாமியா கலாபீடத்தின் ஆய்வு நிறுவனத்திற்கூடாக இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றைத் தொகுத்தார். உள்நாட்டு, வெளிநாட்டு முஸ்லிம், முஸ்லிம் அல்லாத வரலாற்றுத்துறை அறிஞர்களை ஒன்றுகூட்டி சர்வதேச தரத்திலான ஒரு கருத்தரங்கை நடாத்தி அதன் நிறைவாக இலங்கை முஸ்லிம்களின் வரலாறு பற்றி ஒருபெருநூலை தொகுத்தளிக்கக் காரணமாக அமைந்தது. இன்று இலங்கை முஸ்லிம்களின் வரலாறு பற்றிப் பேசும் நூல்களில் கலாநிதி சுக்ரி அவர்கள் தொகுத்தளித்த இதுவே முதற்தர ஆதாரங்களைக் கொண்ட சிறந்த நூலாக விளங்குகின்றது. இத்தொகுப்பு 1986 இல் வெளியிடப்பட்டது.

### சர்வதேச ஆய்வுச் சஞ்சிகைகளுக்கான ஆக்கங்கள்.

இவர் ஆங்கிலத்தில் பல ஆய்வுக் கட்டுரைகளை எழுதியுள்ளார். இவர் எழுதியுள்ள சர்வதேச தரம்வாய்ந்த சஞ்சிகைகளாகப் பின்வரும் சஞ்சிகைகளைக் குறிப்பிட முடியும்.

01. *The Muslim World League Journal*
02. *Islamic Studies*
03. *Journal of the Archaeological Survey Department*
04. *An Nahdah*
05. *Hamdard Islamicus 241*

ஆய்வாளராகவும் பன்மொழி புலமை கொண்டவராகவும் நடுநிலை நின்று பிரச்சினைகளை அணுகுபவராகவும் இருப்பதால் முஸ்லிம் சமூகத்தால் மட்டுமன்றி இலங்கையர் சமூகத்தில் அவர் பிரபல்யம் பெற்றிருந்தார். இலங்கையில் கண்டெடுக்கப்பட்டுள்ள அரபுமொழி கல்வெட்டுக்கள் பற்றிய ஆய்வுகளை அவர் மேற்கொண்டு வருவதும் இலங்கையின் புதைபொருள் ஆய்வாளர் சங்கத்தின் அவர் ஓர் உறுப்பினராக இருந்து செயற்படுவதும் இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றை விஞ்ஞான ரீதியாக நிறுவப் பெரும் துணையாக அமைந்தது.

கலாநிதி சுக்ரி அவர்களின் கல்விப் பணிகளை புது நோக்கில் சமூகப் பார்வையில் அணுக வேண்டியுள்ளது. இவர் கொழும்பு, களனி, பேராதனை பல்கலைக்கழகங்களில் விரிவுரையாளராகப் பணியாற்றிய போதிலும் அவருடைய வகுப்பறை கற்பித்தலுக்கு வெளியேயும் முறைசாரா கல்வி மூலம் சமூகத்திற்கு கற்பித்துக் கொண்டிருந்தார். பல்கலைக் கழகத்தில் பயிலக்கூடிய காலத்திலேயே அவரது ஆக்கங்கள் எமது நாட்டுப் பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் இடம் பெற்றுவந்தன. அவரையும் ஆசிரியர் குழாத்தையும் இணைத்துக்கொண்டு "அல்மதீனா" என்ற சஞ்சிகை அவரது ஆக்கங்களுக்கு இடமளித்தது. பிரசித்த பாடசாலைகள் ஆசிரிய கல்லூரிகள் பல்கலைக் கழகங்கள் வெளியிடும் சஞ்சிகைகளிலெல்லாம் அவரது கட்டுரைகள் இடம்பெற்று வந்தன. அதேவேளை வானொலி உரைகளும் பொதுச் சொற்பொழிவுகளும் சமூகத்துக்கு அறிவூட்டிக் கொண்டிருந்தன.







### இஸ்லாமிய இளைஞர்களை நெறிப்படுத்தல்

ஜாமிஆ நழீமிய்யா கலாபீடத்தின் பணிப்பாளராகப் பணியாற்றத் தொடங்கியபோது அவரது கல்விச் சேவை இன்னும் விரிவடைந்தது. குறிப்பாகப் படித்த மத்தியதரவகுப்பினரை மையப்படுத்தி அவர் தனது கல்விச் செயற்பாட்டை விரிவுபடுத்தினார். அதுமுறைசாராக் கல்விப்பணியாகவே அமைந்தது. வகுப்பறையில் குறிப்பிட்ட பாடங்களைக் கற்பிக்கின்ற ஆசிரியர்களுள் ஒருவராகவன்றி சமூகம் என்ற மாணவர் தொகுதிக்கு வாழ்க்கை என்ற பாடத்தைக் கற்பிப்பதில் அவர் ஈடுபாடுகொண்டார். அவரது பகிரங்கச் சொற்பொழிகள், வானொலி உரைகள் மாநாட்டுப் பேருரைகள் தொடக்கவுரைகள் ஆய்வுரைகள் விரிவுரைகள் ஆய்வுக் கட்டுரைகள் நூல்கள் யாவும் இந்தப்பணியை நிறைவேற்றுவனவாகவே உள்ளன.

அவரது கல்விப் பணிகள் இளைஞர்களையும் படித்த மத்தியதர வகுப்பினரையும் மையப்படுத்தி செயற்படுவதை அவதானிக்கலாம். பல்கலைக் கழகத்துக்கு வரும் பட்டதாரிகள் மூலம் கற்றுக்கொண்ட ஒருபாடமாகவும் இதனைக் கருதலாம்.

நவீன உலகாயதவாதிகள் தமது பிரசார சாதனங்களான நூல்கள் சஞ்சிகைகள் வானொலி தொலைக்காட்சி ஆகிய ஆயுதங்களைக்கொண்டு நடத்துகின்ற இலட்சியவாத சிந்தனைப் படையெடுப்புக்களுக்கு எமது இளைஞர் சமுதாயம் பலியாகி ஈமான் இஸ்லாம் என்பன சூறையாடப்பட்டுள்ளன. இப்பயங்கரமான காலகட்டத்தில் இளைஞர்களை இஸ்லாத்தின் பால் மீட்கும்பணி அவசரமாகவும் அவசியமாகவும் தேவைப்படுகிறது. இதுவே இன்றைய ஜிஹாத் ஆகும். இஸ்லாத்தின் உன்னத உயர்ந்த கருத்துக்களை நவீன தத்துவங்களோடு ஒப்புநோக்கி விளக்கி இஸ்லாமிய போதனைகளை வழங்கும் நூல்களையும் சஞ்சிகைகளையும் வெளியிடுவதன் மூலமே இத்தகைய பயங்கர சவாலை சமாளிக்க முடியுமென்பது எமது ஆழ்ந்த நம்பிக்கையாகும் என்று மௌலானா அபுல் ஹஸன் அலி நத்வி அவர்களின் " காலத்தின் அறைகூவலும் நவயுகத்தின் சவாலும்" என்ற நூலின் அறிமுகத்தில் எழுதியுள்ள கலாநிதி *சுக்ரி அவர்கள், அவரது* ஆக்கங்களை இந்தப் பாணியிலேயே வடிவமைத்துள்ளார். இதற்கு இஸ்லாமும் மனித உரிமைகளும்(1995) மதமும் அறிவியலும்(1994) இஸ்லாமிய வாழ்வியல் கோட்பாடுகள்(1999) முதலிய நூல்களையும் இஸ்லாமிய சிந்தனை இதழில் தொடராக எழுதி வெளியிட்ட ஆய்வுக்கட்டுரைகளையும் ஆதாரமாகக் குறித்துக் காட்டலாம்.



அறிவு ஆய்வுப் பணிகளுள் இஸ்லாமிய சிந்தனை அரை நூற்றாண்டு காலம் இடைவிடாது தொடர்ச்சியாக தான் பிரதம ஆசிரியராக இருந்து காலாண்டு சஞ்சிகையான இஸ்லாமிய சிந்தனையை வெளியிட்டு வந்தமை அவரது சாதனையையே எடுத்துக் காட்டுகின்றது.

இஸ்லாமிய சிந்தனைகளை புத்திஜீவிகளுக்கு மத்தியில் உருவாக்குவதும், பரப்புவதுமென்ற அவரது இலக்கை மையப்படுத்தியே அவரைப் பிரதம ஆசிரியராகக் கொண்ட "இஸ்லாமிய சிந்தனை" என்ற ஜாமிஆ நழிமிய்யாவின் ஆய்வுச் சஞ்சிகை வெளியாகிக் கொண்டிருக்கிறது. முஸ்லிம்கள் வாழ்வையும் அதனோடு தொடர்புடைய விடயங்களையும் இஸ்லாமிய சிந்தனை உளப்பண்பு கண்ணோட்டம் என்பவற்றிலிருந்து விடுபட்டு அதற்குப் புறம்பான நிலைகளில் அணுக முற்படுகின்றனர். பெரும்பாலானோர் பெயரளவில் முஸ்லிம்களாகவும் இஸ்லாத்திற்கு முரணான வகையில் செயற்படுபவர்களாகவும் காணப்படுகின்றனர். இந்நிலை முஸ்லிம்களின் கலாசார தனித்துவத்தின் சீர்குலைவுக்கு அடிப்படைக்காரணமாக அமைவதில் வியப்பில்லை. முஸ்லிம் சமுதாயத்தின் இந்த அவசரத்தேவையை பூர்த்தி செய்யும் இலட்சியத்தை முன்வைத்து "இஸ்லாமிய சிந்தனை" மலர்ந்துள்ளது241 என்று இஸ்லாமிய சிந்தனையின் முதலாவது இதழில் குறிப்பிட்டுள்ள அவர், அதன் தாக்கத்தை விளங்கிக் கொண்ட பின்னர் நூறாவது இதழில் "இது சிந்திக்கும் வர்க்கத்தினரை நோக்கமாகக் கொண்டு வெளியிடப்படுகிறது. எனவே அதன் வாசகர் வட்டம் குறுகியது என்பது ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய உண்மையாகும். இந்த குறுகிய வட்டம் சமூகத்தில் மிகக் கணிசமாக சிந்தனைச் செல்வாக்கைச் செலுத்தும் ஆற்றல் படைத்தது. மக்களின் அறிவு சிந்தனை ரசனைக்கேற்ப இஸ்லாமிய சிந்தனையின் தரத்தைப் பேணுவதைத்தவிர்த்து இஸ்லாமிய சிந்தனையின் தரத்திற்கு மக்களின் அறிவையும் சிந்தனையையும் உயர்த்துவதே எமது நோக்கம் என்று குறிப்பிடுகின்றார் என்ற இமாம் கஸ்ஸாலியின் மேற்கோளை எடுத்துக் காட்டுகின்றார்.



இந்த நோக்கத்தை அடைவதற்காக முஸ்லிம் சமூகத்தில் பரந்த அளவிலான புத்திஜீவிகள் உருவாக வேண்டுமென அவர் விரும்பினார். இந்த யுகம் முஸ்லிம் உம்மத்தை நோக்கி விடுக்கும் அறைகூவல்களை சமாளிக்கும் ஆற்றல் பெற்ற கல்விமான்களும் அறிஞர்களும் தேவைப்படுகிறார்கள். பல்லின சமூகங்களைக் கொண்ட இலங்கை போன்ற ஒரு நாட்டில் இஸ்லாமிய சரீஆவை முஸ்லிம் சமூகத்தில் செயல்படுத்துவதில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைச் சமாளிக்க "பிக்ஹுல் அகல்லியா" போன்ற துறைகளில் அறிவும் ஆர்வமும் படைத்த அறிஞர்கள் அவசியப்படுகிறார்கள். பல்வேறு மதங்கள் பற்றிய அறிவையும் விளக்கத்தையும் பெற்று மதங்கள் பற்றிய உரையாடலில் பங்குபற்றி இஸ்லாத்தின் கருத்தை எடுத்துக்கூறும் ஆற்றல் படைத்த அறிஞர்கள் தேவைப்படுகிறார்கள். இந்த நாட்டில் எமது இருப்பையும் வரலாற்றுப் பாரம்பரியத்தையும் ஆதார பூர்வமாக நிறுவும் ஆற்றல் படைத்த வரலாற்று அறிஞர்கள் தேவைப்படுகிறார்கள் எனவும் முஸ்லிம் சமூகம் கண்டு கொள்ள வேண்டிய அறிவுப்பணிகளை அடையாளப் படுத்தினார்.

### சீர்திருத்தப்பட வேண்டிய கருத்துக்கள் வாழ்வு

இஸ்லாம் மனித வாழ்வை லோகாயதம் ஆன்மீகமென்று இரு கூறாகப்பிரித்து நோக்கவில்லை. மதம் சார்ந்தவை, மதச்சார்பற்றவை, என்ற பாகுபாடும் இஸ்லாத்துக்கு முற்றிலும் அன்னியமானது. மனிதனின் தனிப்பட்ட வாழ்வு, குடும்பம், பொருளாதாரம், அரசியல், சமூக உறவு, கலை இலக்கிய முயற்சிகள் அனைத்தையும் பொறுத்தவரை அல்லாஹ்வினதும் அவனது தூதரினதும் போதனைகள் வரையறைகள் பிரமாணங்களுக்குக் கட்டுப்பட்டு வாழும் ஒரு கட்டுக்கோப்பை இஸ்லாம் ஏற்படுத்தியுள்ளது. புரந்து விரிந்த இப்பூமியை ஒரு வணக்கஸ்தலமாகவும், மனித வாழ்வு முழுவதையும் வணக்கமாகவும் மாற்றும் இப்பண்பு இஸ்லாத்தின் சிறப்பம்சமாகும். இக்கருத்தை மறுதலைப்படுத்தி ஆத்மஞானிகள் உலகைத் துறந்தவர்கள் அல்லர். ஆவர்கள் உலக நலனுக்காக உழைத்திருக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டுவதாக சுக்ரி அவர்களின் " ஆத்ம ஞானிகளும் அறப்போராட்டமும் என்ற நூல் அமைந்துள்ளது.

### கல்வி

வாழ்வைப் போன்றே கல்வியிலும் இந்த வேறுபாடு நோக்கப்படக்கூடாது என்பதை அவர் வலியுறுத்திக் கூறினார். இஸ்லாமிய நோக்கில் அறிவியலுக்கும் மதத்திற்குமிடையில் மேற்குலகில் நிலவுவது போல எத்தகைய மோதலும் நிலவ முடியாது. ஏனெனில் விஞ்ஞானமும் மதமும் ஒன்றையொன்று அணிந்ததாக மனிதனின் இயற்கையிலேயே அமைந்துள்ளன. இஸ்லாம் உருவாக்க முனையும் மனிதனின் இந்த இரண்டு அம்சங்களோடும் தொடர்புடைய அறிவு எத்தகைய முரண்பாடோ மோதலோ இன்றி சமபலநிலையில் தொழிற்படும்.

ஏனெனில் ஒன்று அவன் இறைவனுக்கு அடிபணிந்து வாழத்துணைபுரிய, மற்றது இறை சிருஷ்டிகளின் தன்மை, குண இயல்புகள், பிரபஞ்சத்தில் அதன் செயற்பாடுகள் பற்றிய அறிவைப் பெற தூண்டுகிறது. அறிவியல் அறிவினதும் ஆத்மீக அறிவினதும் ஒருங்கிணைந்த செயற்பாட்டின் விளைவாக இறை நம்பிக்கையும் இறை அச்சமும் நிறையப் பெற்ற மனிதர்கள் உருவாவார்கள்.

இதனையே அல்குர்ஆனின் 35 : 28 ஆம் வசனம் சுட்டிக் காட்கின்றது. என சகாத் கோட்பாடுகளும் நடைமுறையும் எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

முறைசாராக் கல்விக்குத் துணைபுரியும் பேச்சு, எழுத்து தொடர்பாக கலாநிதி சுக்ரி அவர்கள் தெளிவான கருத்தை முன்வைத்துள்ளார். எழுத்தாளன் சமூகத்தின் ஓர் அங்கம். சமூகத்தின் இலட்சியங்கள், உணர்வுகள் , ஆபாசங்கள், பிரச்சினைகள் அனைத்தும் அவனைப் பாதிக்கின்றன. ஆதலால் அவனது எழுத்தில் சமூகம் பிரதிபலிக்கும். சூனியத்திலிருந்து இலக்கியம் படைக்க முடியாது. ஒருவனுக்குப் பேசக்கூடிய, எழுதக்கூடிய ஆற்றல் இருக்கின்றதென்றால் அவன் எதனையும் பேசவும் எழுதவும் முடியும் என்பது கருத்தல்ல. அது அல்லாஹ் அவனுக்களித்த அமானிதம். ஆதலால் அவனுடைய எழுத்தில், பேச்சில் இலட்சியம் இருக்க வேண்டும்.

### இலக்கியம்

ஒரு காலத்தில் கலை கலைக்காக என்ற கோட்பாடு நிலவி வந்தது. அவன் சமூகத்திலிருந்து விடுபட்டு கற்பனை உலகை சிருஷ்டித்து அதில் சஞ்சரிக்கின்றான். இதனால் அவனுக்கும் சமூகத்திற்கும் எத்தகைய தொடர்பும் இருப்பதில்லை. இதனை இஸ்லாம் ஏற்றுக் கொள்ளவில்லை. ஒரு கொள்கையோடு இலக்கியம் படைக்க வேண்டும் என்பதைத்தான் ஸூரதுஷ் ஷுரா எடுத்துக்காட்டுகின்றது. கலை வாழ்க்கைக்காக என்ற கருத்தை முன்வைக்கின்றது. ஓர் ஒழுக்கங்கெட்ட இலக்கியவாதியினால் சமூகத்திற்கு ஏற்படுகின்ற பேரழிவு, ஜெங்கிஸ்கானின் இராணுவத்தால் ஏற்பட்ட பேரழிவை விடப் பயங்கரமானது என தனது இஸ்லாமிய வாழ்வியல் கோட்பாடு எனும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை முஸ்லிம்களுக்கு மத்தியில் இஸ்லாத்தின் பரந்த தன்மையை எடுத்துக்காட்டுவதில் கலாநிதி சுக்ரியின் பங்கு தட்டிக்கழிக்க முடியாது. ஏற்கனவே குறிப்பிட்டது போல இஸ்லாம் ஆன்மீகப் பண்புகளை மட்டும் கொண்டதல்ல. அதற்காதாரமாக இஸ்லாத்துடன் தொடர்பற்றதாகக் கருதப்பட்டுவந்த பல கலைகளையும் அவற்றுக்கும் இஸ்லாத்திற்கும் இடையிலான தொடர்பையும் தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளார். இஸ்லாமிய அரசியல் கோட்பாடு (13:1) இஸ்லாத்தின் நோக்கில் தொல்பொருளியல் (14:1) முஸ்லிம்களும் பல்கலைக் கழகப் பாரம்பரியமும் (18:3) முஸ்லிம்களும் வரலாற்றுக் கலையும்(20:2) இஸ்லாமிய நோக்கில் ஆய்வு (20:3) ஆய்வுக்கான அவசியமும் ஆய்வு பற்றிய இஸ்லாமிய நோக்கம் (25:6) நாகரிகம் பற்றிய இரு கண்ணோட்டங்கள் (21:1) அல்குர்ஆன் ஆய்வு முறையும், மேற்கத்திய ஆய்வு முறையும் (22:1) இஸ்லாமிய அழகியற் கோட்பாடும் மேற்கத்திய அழகியற் கோட்பாடும்(22:3) முஸ்லிம்களின் இசைப்பாரம்பரியம் (23:3) கட்டடக்கலைப் பாரம்பரியமும் அதன் வளர்ச்சியும் (24:1,2) இஸ்லாமிய உளவியலும் மேற்கத்திய உளவியலும் (25:4) போன்ற இஸ்லாமிய சிந்தனையில் வெளியான ஆய்வுக் கட்டுரைகளே இதற்கு ஆதாரமாக எடுத்துக் காட்டலாம். அதே நேரத்தில் இஸ்லாமிய ஆன்மீகப் பண்புகளை விளக்ககின்ற ஆக்கங்களும் வெளியாகியுள்ளன. முஸ்லிம் அல்லாதோருக்குக் குறிப்பாக புத்திஜீவிகள் மத்தியில் இஸ்லாத்தை அறிமுகப்படுத்தும் பணியும் அவரால் நிகழ்த்தப்பட்டன. தேசிய சர்வதேசிய மாநாடுகளில் நிகழ்த்தப்பட்டுள்ள அவரது உரைகள் இத்துறையில் பொரும் முக்கியம் பெருகின்றன.

மேலும் நவீன முஸ்லிம் உலகிற்கு வரலாற்றிலும் நிகழ்காலத்திலும் முன்மாதிரியாகத் திகழ்ந்த சிந்தனையாளர்களையும் சீர்திருத்தவாதிகளையும் இவர் அறிமுகப்படுத்தி வந்தார். இஸ்லாமிய சிந்தனைகளில் வெளியான ஷாஹ் வலியுல்லாஹ்வின் பங்களிப்பு (2:3) இப்னு தைமியாவின் தஸவ்வுப் கோட்பாடு (9:3) இமாம் கஸ்ஸாலியின் பங்களிப்பு (1:4, 2:3) அல்பிரூனியின் மதங்கள் பற்றிய ஒப்பீட்டாய்வு (14:3) இப்னு பதூதா (17:12) முஹம்மது அல் கஸ்ஸாலி (18:2) ஜமாலுத்தீன் ஆப்கானி (21:3) இப்னு கல்தூன் (25:3) மாலிக் பின் நபி (24 3,4) அபுல் ஹஸன் அலி நத்வி (22:2) என்ற தலைப்பிலான இவரது ஆக்கங்கள் இதனை நிரூபிக்கின்றன.

பன்னூல் ஆசிரியரான இவரது நூல் வெளியீடுகள் அனந்தம், ஆய்வறிக்கைகள் அனந்தம், அறிவு மாநாடுகள் அனந்தம், சொற்பொழிவுகள் அனந்தம். தனது இறுதி மூச்சுவரை கல்வித் தாகம் கொண்டவராக காணப்பட்ட இவர், சமூகத்திற்கு பல வழிகளிலும் அறிவியல் பணிகளை மேற்கொண்டார்.

### இறுதிக் காலகட்டம்.

தனது அமுத விழாவினை நெருங்கும் காலப்பகுதியில் நோய் வாய்ப்பட்ட நிலையிலும், நாட்டிலே முஸ்லிம்களின் இருப்புக்கு ஏற்பட்ட அறைகூவல்களுக்கும் சவால்களுக்கும் அரசியல் நெருக்கடிகளுக்கும் அறிவு பூர்வமான வேலைத்திடங்களை ஆரம்பிப்பதன் அவசியத்தை உணர்ந்தார்.

நல்லிணக்கம், சக வாழ்வு தொடர்பான ஆய்வுகளையும் மேற்கொண்டார். கொவிட் பத்தொன்பது பெருந்தொற்று நெறுக்கடியால் நாடு பூராகவும் முடக்கப்பட்டு அசாதாரண நிலைமைகள் காணப்பட்ட நிலைமையில் தான் சுகயீன முற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். 2020.05.19ம் திகதி வல்ல இறைவனின் அழைப்பை ஏற்று அவன் பக்கம் மீண்டார். அவருடைய நன்மையின் தட்டை கணதியாக்கி உயர்ந்த சுவனமான பிர்தௌசுல் அஃலாவை வழங்குவானாக.




**அஷ்ஷெய்க் எம்.எம். முன்திர்.**
**(நளீமி, M.A.)**
*(செயலாளர், மாத்தறை மாவட்ட ஜம்இய்யதுல் உலமா,*
*உதவி அதிபர் அறபா மத்திய கல்லூரி – வெலிகம.)*

இப்பத்திரிகை அசோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜனவரி மாதம் 15ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.